விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-8463)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 26 வியாழக்கிழமை (12.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 358

## ஹயஸ் - மோட்டார் சைக்கிள் சிறுப்பிட்டியில் மோதி விபத்து

### குடும்பத் தலைவர் உயிரிழப்பு



(கரணவாய்)

ஹயஸ் வானும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டி பகுதியில் நேற்று 23

### காய்ச்சலினால்

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சுழிபுரம், பொன்னாலைப் பகுதியைச் 23

## இலங்கைத் தமிழருக்கு குடியுரிமை மறுப்பு

### கமல்ஹாசன் ஆதங்கம்



(சென்னை)

இந்தியாவின் ராஜ்சபாவில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்திய குடியுரிமை யோசனையில் ஏன் இலங்கைத் 23

### ஈழத் தமிழ் மக்கள் தொடர்பில்

# இந்திய மத்திய அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை

### மாநிலங்களவையில் வைகோ ஆவேசம்



*(சென்னை)*

ஈழத் தமிழ் மக்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசுக்கு எவ்விதமான அக்கறையும் இல்லை என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மாநிலங்களவையில் ஆவேசமாக பேசியுள்ளார்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

### போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள

## பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்ன இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்

(யாழ்ப்பாணம்)

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று அறியமுடிகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு நடைமுறைகள் தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று பலாலி இராணுவத் தலைமையகத்தில் இன்று முற்பகல் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரை 23

## கிணற்றில் தவறி விழுந்த 6 வயதுச் சிறுவன் மரணம்

### இருபாலை மடத்தடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறி விழுந்த 6 வயதுச் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் இருபாலை மடத்தடி பகுதியைச் சேர்ந்த வசந்தகுமார் றியாஸ் (வயது - 6) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வீட்டு 23

### கோட்டா ஜனாதிபதியான பின்

## அரசியலமைப்பு சபை இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர், 23

## யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களை

### பதவி விலகுமாறு பணிப்புரை?

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களை பதவி விலகுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்ததாக அறிய முடிகிறது.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதவி 23

### முள்ளிவாய்க்காலில் தமிழன் கைக்குண்டு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் ஆரம்ப 23

### ஜப்பான் வெளிவிவகார அமைச்சர்

## ரொஷிமிட்சு மொடேகி இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜப்பான் வெளிவிவகார அமைசசர் ரொஷிமிட்சு மொடேகி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதற்கமைய அவர் எதிர்வரும் 14ஆம் திகதி 23

## சுவிஸ் தூதரக பணியாளரை சிஐடியில் முன்னிலையாகுமாறும் அறிவிப்பு

(கொழும்பு)

வெள்ளை வாகனத்தில் கடத்தப்பட்டதாக கூறப்படும் சுவிஸ் தூதரக பணியாளர் கார்னியர் பானிஸ்டர் பிரான்சிஸ் அல்லது சிறிலதாவை இன்று சிஐடியில் முன்னிலையாகும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு பயணத்தடை கோரி சிஐடியின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில், இந்த வழக்கும் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கடந்த 25ஆம் திகதி சுவிஸ் பணியாளர் கடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# என் ஆத்மார்த்த குருவுக்கு மனமுவந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

**12.12.2019**

எளிமையின் உருவே!– என்
ஆத்மார்த்த குருவே
இன்று பிறந்தநாள் காணும் உங்களை
இனிதே வாழ்த்துகிறேன்
அரும்பெரும் சைவம் வாழ ஆலயங்கள் தோறும்
புராண படனங்களையும் தெய்வத் திருமுறைகளையும்
வயது முதிர்ந்த இவ் வேளையிலும்
வார்த்தை தடுமாறாது, பொருள் விளங்குமாறு
பண்ணுடன் ஓதுகின்ற– உங்கள்
பாங்கை என்னவென்பேன்? தெய்வ அருளே துணையென்பேன்!
யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த
சாந்தி அச்சகத்தின் முகாமையாளராக நீண்டகாலமாகவிருந்து– நீங்கள்
சாற்றிய பணிகள் எத்தனை! எத்தனை!!
உங்கள் நல் ஆலோசனைகள்
என் வாழ்க்கைப் பாதையை மாற்றியது!
உங்களின் அனுபவப் பகிர்வுகள்
எனக்குள் புது உத்வேகமானது!
உங்கள் சைவப் பணிக்கு நீங்கள் வாங்கிய விருதுகள்
கௌரவங்கள் சாட்சி...
என் வாழ்வுக்கு எப்போதும் நீங்களே நல்வழிகாட்டி!
வாழ்க பல்லாண்டு...வாழ்க வாழ்கவே...




என்றென்றும் வாழ்த்துக்களுடன்,
உங்கள் அன்பு சீடன்,
செ.ரவிசாந் (ஊடகவியலாளர்)

குப்பிழான் தெற்கு,
ஏழாலை.

[1457]

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 ❁ 10 ❁ 1946



மறைவு 11 ❁ 12 ❁ 2019

## சின்னத்தம்பி செல்லையா

(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லையா (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்) நேற்று (11.12.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோகரியின் அன்புக் கணவரும் உலகேஸ்வரி, தங்கவேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கௌரி, ஸ்ரீரங்கன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர் - யாழ் மாவட்டச் செயலகம்), சங்கீதா, சர்மிளா, சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரகலாதன், அனுசியா (சிரேஷ்ட விரிவுரையாளர் - விவசாய பீடம்), தவேந்திரா, சந்திரமோகன், செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதோஷ், அபிலஜா, அக்ஷனா, அஜன்நிகா, வாணன், கவின், அரிகரன், ஐஸ்வர்யா, அபிராம், அஜிந்தன், றேறாம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விக்னேஸ்வரா வீதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்
072 895 0958 / 077 312 7514

(C-8508)

# மரண அறிவித்தல்



## முத்துக்குமாரசாமி திலீபன்

(முகாமையாளர், கொழும்பு பங்குச் சந்தை - யாழ்ப்பாணம்)

மருத்துவமனைச்சாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசாமி திலீபன் அவர்கள் நேற்று (11.12.2019) அகாலமரணமடைந்தார்.

அன்னார் அச்சுவேலி முத்துக்குமாரசாமி (இளைப்பாறிய அதிபர்) - சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியர்) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தவரத்தினம் - ஈஸ்வரிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் சுறேகாவின் அன்புக் கணவரும், சபினயா, யதுசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ராகுலன் (ஆசிரியர் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கவிதா (பிரதி அதிபர் - இடைக்காடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகிதா - சர்வநாதன், சுதன், லலீசன் (பிரதி அதிபர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை), ரேவதி (ஆசிரியர் - இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி முழக்க்ன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருத்துவமனைச் சாலை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்

# அரசியல் கைதிகளின் விடுதலையை ஆராய ஆணைக்குழு அமைப்பது வெறும் கண்துடைப்பு

## அருட்தந்தை சக்திவேல் எதிர்ப்பு

(ஹற்றன்)

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆராய்வதற்கு ஆணைக்குழு அமைப்பது வெறும் கண் துடைப்புச் செயலாகும். இதை காலத்தை இழுத்தடிக்கின்ற ஒரு செயலாக நாங்கள் கருதுகின்றோம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.**




ஹற்றனில் நேற்றுப் புதன் கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து விடுதலை செய்ய வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கையாக இருந்தது. ஆனால்அந்தக் கோரிக்கையை இதுவரைக்கும் தெற்கின் பெரும்பாலான சிங்களச் சமூகம் ஏற்றுக்கொள்ளாத ஒரு சூழ்நிலையிலேயே தற்போது தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என ஞானசார தேரர் கூறியுள்ளார்.

மேலும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆராய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற சிந்தனை ஞானசார தேரருக்கு வந்தது வரவேற்கத்தக்க விடயமாகும். இந்த சிந்தனை அனைத்து தெற்கு சமூகத்தினரிடமும் வரவேண்டும் என எதிர் பார்க்கின்றோம்.


இது ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய அரசியல் சார்ந்த பிரச்சினையாகும். இந்த அரசியல் சார்ந்த பிரச்சினையை அரசியல் ரீதியாகவே நோக்க வேண்டும். இதனைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கண்கொண்டு பார்க்கக்கூடாது என்பதுதான் எங்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

எனினும் ஆணைக்குழுக்கள் நியமிப்பது ஒரு கண் துடைப்பு செயலாகும். கடந்த காலங்களில் எத்தனையோ ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த ஆணைக்குழுக்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் எந்த அரசாங்கத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. இதை காலத்தை இழுத்தடிக்கின்ற ஒரு செயலாக நாங்கள் கருதுகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதிக்கும் பிரதமருக்கும் இடையில் சந்திப்பு





(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

கொழும்பில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தால் வெளியிடப்பட்டதும் 2019 ஆம் ஆண்டுக்கு உரியதுமான மனித அபிவிருத்தி அறிக்கையின் முதலாவது பிரதி இதன்போது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

. மேலும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்துடன் தமது பணியைத் தொடர்ந்தும் முன் கொண்டு செல்லவுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். (இ-7)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த இடைக்கால விசாரணை அறிக்கை

### ஜனாதிபதியிடம் 22-ம் திகதி கையளிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. எதிர் வரும் 22 ஆம் திகதி இந்த அறிக்கை கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான விசேட நிபுணர், பேராசிரியர் றொஹான் குணரட்ன ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

இவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு சாட்சியம் வழங்கியிருந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்தது.

ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்கவே அவர் இவ்வாறு சாட்சியம் வழங்கினார்.

இதுவரை 20 இற்கும் அதிகமானோர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்ததாக ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (இ-7)

## இணையத் தாக்குதல்களை எதிர்கொள்ள இலங்கை தயார் நிலையில் இல்லை


### பேராசிரியர் றொஹான் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எதிர்காலத்தில் இணையத் தாக்குதல்களைக் கையாளும் வகையில் புலனாய்வு அமைப்புக்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் என்று சிங்கப்பூரின் நயாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு கற்கைகள் பீட பேராசிரியர் றொஹான் குணரட்ன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக நேற்று முன்தினம் சாட்சியம் அளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உலகெங்கும் உள்ள அரசாங்கங்கள் இணைய தாக்குதல் அச்சுறுத்தலை அங்கீகரித்து அவற்றைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளன. எனினும், இலங்கையில் தயார்நிலை போதுமானதாக இல்லை.



இலங்கைப்புலனாய்வு அமைப்புகளும் தொடர்புடைய நிறுவனங்களும் இணைய தாக்குதல்களைச் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இலங்கை புலனாய்வு அமைப்புக்களுக்கு இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் தரவு சேகரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

தாக்குதல் நடத்துபவர்களின் சமூக ஊடக ஊட்டங்கள் மூலம், பயங்கரவாத தாக்குதல்கள் பற்றிய தகவல்களைப் புலனாய்வு அமைப்புக்கள் பெற்ற உதாரணங்கள் பல உலகில் உள்ளன.

புலனாய்வு அமைப்புக்கள் நவீன மயமாக்கப்பட்டு தயாராக இருக்க வேண்டும். இது ஒரு முக்கியமான துறை" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்ட்; இலங்கை அணி சுமாரான ஆட்டம்



சுற்றுலா இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில், முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 202 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தானுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுப்பயணத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணி, அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற் கின்றது.

அதன் முதல் போட்டி நேற்று ராவல்பிண்டி மைதானத்தில் ஆரம்பமானது. போட்டியில் நாணயச்சுழற்சியில் பெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த வகையில், தொடக்க வீரர்களாக அணித்தலைவர் திமுத் கருணாரட்ன மற்றும் ஓசாத பெர்ணான்டோ ஆகியோர் களமிறங்கினர்.

இவ்விருவரும் முதல் விக்கெட்டுக்காக 96 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், திமுத் கருணாரட்ன 59 ஓட்டங்களுடன் ஷகீன் ஷா அப்ரிடியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஓஷாட பெர்ணான்டோவும் 40 ஓட்டங்களில் வெளியேற, நீண்ட நாட்களின் பின்னர் அணிக்குத் திரும்பிய முன்னாள் தலைவர் தினேஷ் சந்திமல் களம் புகுந்தார்.

ஆனால், வெறும் இரண்டு ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்து சென்றார். மறுபுறத்தே சற்று நம்பிக்கை அளித்த அனுபவ வீரர் மத்தியூஸும் 31 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

நேற்றைய முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் இல ,ங்கையணி, தமது முதல் இன்னிங்ஸிற்காக 5 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது.



ஆடுகளத்தில் தனஞ்சய டீ சில்வா 38 ஓட்டங்களுடனும், விக்கெட் காப்பாளர் டிக்வெல்ல 11 ஓட்டங்களுடனும் உள்ளனர்.

பாகிஸ்தான் பந்துவீச்சில் நசீம் ஷா இரண்டு விக்கெட்டுக்களையும், மொஹமட் அப்பாஸ், ஷகீன் அப்டிரி, உஸ்மான் ஷின்வாரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

## தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவு 251 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்தைப் பிடித்தது இலங்கை




நேபாளத்தின் தலைநகர் காத்மண்டு மற்றும் பொக்காராவில் நடைபெற்றுவந்த 13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

இதனை முன்னிட்டு காத்மண்டுவில் அமைந்துள்ள தசாரத் விளையாட்டரங்களில் போட்டி நிறைவு நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் பதக்கப்பட்டியலில் இந்தியா தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிப்பதுடன், இலங்கை மூன்றாமிடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்தியா 174 தங்கம், 93 வெள்ளி, 45 வெண்கல பதக்கங்கள் என 312 பதக்கங்களை பெற்று முதலிடத்தில் உள்ளது.

இலங்கை 40 தங்கம், 83 வெள்ளி, 128 வெண்கலம் என 251 பதக்கங்களை பெற்று மூன்றாவது இடத்தை பிடித்தது.

## ஜப்பானில் நடைபெறும் ஒலிம்பிக்

## சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் மீள்சுழற்சி செய்யப்பட்ட ஆடைகளை பயன்படுத்த தீர்மானம்

ஜப்பான் ஒலிம்பிக் போட்டியின் போது மீள்சுழற்சி செய்யப்பட்ட ஆடைகள் பயன்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




டோக்கியோவில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ளது.

இந்த போட்டிக்கான ஏற்பாடுகளை ஜப்பான் அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

இந்தநிலையில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியை, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், பசுமை ஒலிம்பிக் போட்டியாக நடத்த ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக மீள்சுழற்சி முறையின் மூலம், போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள் அணியும் ஆடைகளை வடிவமைக்க ஜப்பான் தீர்மானித்துள்ளது.

இதற்காக மக்களிடமிருந்து பழைய ஆடைகள் திரட்டப்பட்டு வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்மூலம் சுற்றுச்சூழல் காக்கப்படுவதுடன், தங்களின் உடைகளை அணிந்து சர்வதேச வீரர்கள் ஆடுகிறார்கள் என்ற திருப்தியையும் ஜப்பான் மக்கள் பெறுவார்கள் என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1985ஆம் ஆண்டு உத்திரட்டாதி 1ம் பாதம் 4ல் சூரியன் செவ்வாய் உள்ள London PR பட்டாரி மணமகனுக்கு மணமகள் தேவை. (வயது வித்தியாசம் 5 வயதுக்கு மேல்)

தொடர்பு : 077 914 7318
Viber : 076 668 8199 (1450)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**பெண் உதவியாளர் தேவை**

நெல்லியடிக்கருகில் வயோதிப தாயாரை பராமரிக்க பெண் உதவியாளர் தேவை.

T.P : 077 113 0600 (C-8509)

**மீண்டும் மானிப்பாயில் றஞ்சிற் மோட்டோர்ஸ்**

**(றஞ்சிற் றிப்பியரிங் & சேவிஸ் சென்டர்)**

HONDA



**யாழ் மக்களுக்காக றஞ்சிற் மோட்டோர்ஸ் HONDA இணைந்து வழங்கும் பண்டிகைக்கால மாபெரும் சலுகைகள்**

01.12.2019 -15.01.2020 வரை எம்மிடம் மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்து குலுக்கல் முறையில் சோபா செற்றினை பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள் றஞ்சிற் மோட்டோர்ஸ் நிறுவனத்தினர்

**எமது சேவைகள்**

- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்

(மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்)



**பண்டிகைக் கால சலுகைகள்** தொடர்புகளுக்கு:0773107549

**காசு மூலமான சலுகைகள்**

விலைக்கழிவு தெரிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 15,000/= வரை



- SLS தலைக்கவசம்
- காப்புறுதி (3ம் நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்


*லீசிங் மூலம் விசேட சலுகைகள்*

- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக்கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

**சிறப்பு சலுகைகள்** - எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளைப் பெற்றிடும் வசதி (நிபந்தனைக்குட்பட்டது)

RANJIT MOTORS
(RRSC Motors Engineers)
Sales & Parts : No- 311/A,Jaffna Road, manipay.
இல -311/A.யாழ் வீதி. மானிப்பாய். 0214927627,0212255228
Service & Parts: No-14, Suthumalai Road,manipay.
இல.14.சுதுமலை வீதி. மானிப்பாய். 0214927337,0212223111
Mobile:0773107549, 0768339898
E.Mail:rrscmanipay@gmail.com
F.Book:Honda Ranjit Motors (8510)

# 01 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
1958 05 25

மண்ணின் மடியில்
2018 11 24

(கி-1444)

அமரர் **சுப்பிரமணியம் குணசீலன்**

ஆலமரமாய் நிழல் தந்தீர்
அன்பின் சிகரமாய் உயர்ந்தீர் அப்பா!
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாய் இருந்தோம் அப்பா
ஓராண்டு கடந்து சென்றது அப்பா
ஓராயிரம் ஆண்டானாலும் ஆறுமோ துயர்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

துயரில் துடிக்கும்
மனைவி, பிள்ளைகள்.

# காலி முகத்திடலில் சூரிய சக்தியில் ஒளிரும் மின்விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை

(கொழும்பு)

காலிமுகத் திடலில் சூரிய சக்தியில் ஒளிரும் மின்விளக்குகளை பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டது.

இரவு நேரத்தில் தமது பொழுது போக்கிற்காக காலிமுகத் திடலுக்கு வரும் பொதுமக்கள், குறித்த பகுதியில் போதிய வெளிச்ச மின்மை காரணமாக பல் வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி பராசக்தி சிவநாதன்

(இளைப்பாறிய சுருக்கெழுத்தாளர் C.T.B)



யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் Dr.யமுனானந்தா அவர்களின் அன்புத் தாயார் திருமதி பராசக்தி சிவநாதன் அவர்கள் 10.12.2019 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! (அ)

**வலம்புரிக் குடும்பம்.**

# மரண அறிவித்தல்

## கணேசரத்தினம் நவரத்தினம் (குணவதி)



மண்ணில் 17.11.1932 மனதில் 10.12.2019

பனிப்புலம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி கணேசரத்தினம்நவரத்தினம் (குணவதி) அவர்கள் கடந்த 10.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அவர் காலஞ்சென்ற முத்தையா அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற விசுவலிங்கம் நல்லபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வி.கணேசரத்தினம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற தங்கராசா, மகேந்திரன் தவமணி, திருப்பதி சிவபாக்கியம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சதாசிவம் இராசலட்சுமி ஆகியோரின் சகோதரியும் சபாநாயகம் (உரிமையாளர்- வேணு பட்டுச்சோலை, (தலைவர்-பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம், முன்னாள் பிரதேசபை உறுப்பினர்-வலிகாமம் மேற்கு, தமிழரசுக்கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி கிளைக்குழுவின் பொருளாளர், செயலாளர்-பனிப்புலம், பண்ணாகம், சித்தங்கேணி விவசாய சம்மேளனம், செயலாளர்- வலி.மேற்கு முதியோர் சமாசம், பொருளாளர்- பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம்), ஜெகதீஸ்வரி, புஸ்பராணி (ஜேர்மனி), செல்வராசா (ஜேர்மனி), இரவீந்திரன் (உரிமையா ளர்-கணேசா பான்சி, பண்டத்தரிப்பு), நகுலராணி, ஈஸ்வரி (ஜேர்மனி), கோபாலகிருஸ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், தேவமலர் (ஓய்வு பெற்ற தாதி-யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற சதானந்தன், சிவானந்தன் (ஜேர்மனி), சிதம்பரம் (ஜேர்மனி), மல்லிகா (ஆசிரியர்-மகாஜனக் கல்லூரி), காலஞ்சென்ற சிவநாயகம், சதானந்தன் (ஜேர்மனி), துசியந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று உடல் தகனக் கிரியைகளுக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.

தகவல்-குடும்பத்தினர்.
077 2465 876

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 5671 532

# கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(கொடிகாமம்)

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நவபுரம் ஸ்ரீதுர்க்கை அம்மன் மண்டபத்தில் நவசக்தி முன்பள்ளி முகாமைத்துவக் குழு தலைவி திருமதி ல.சித்திரா தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-114)

# தங்கத்துடன் நால்வர் கைது



(கற்பிட்டி)

புத்தளம் - கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாவ கடற்பகுதியில் 10 கிலோ கிராம் தங்கம் கைப் பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு இந்தச் சம்ப வம் தொடர்பாக சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டதாகவும் கற் பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.


இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் தங்கம் கடத்தப் பட்டதாகவும் 900 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கம் சந்தேக நபர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் இந்த கடத்தல் மிக நீண்ட காலமாக இடம் பெற்று வந்தமையும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் கந்தக்குளி மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதி களைச் சேர்ந்த வர்கள் எனவும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை கைப்பற்றப்பட்ட தங்கம் உள்ளிட்ட பொருட்களுடன் புத் தளம் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத் துள்ளதாக கற்பிட்டி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ-2)





நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. மாலை 4.45 மணியளவில் வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து வள்ளி தெய்வானை சமேதராக உள் வீதியுலா வந்த முருகப் பெருமான் திருக்கைலாய வாகனத்தில் ஆரோகணித்தது. சொக்கப் பானைக்குத் தீ மூட்டப்பட்டது. முருகப் பெருமான் திருக்கைலாய வாகனத்தில் வெளி வீதியுலா வந்தார்.
(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)



அராலி மத்தி முருகமூர்த்தி ஆலயத்தில் திருக்கார்த்திகை சொக்கப்பானை எரிப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## முன்பள்ளியின் காகிதத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிட்ஸ் வேர்ல்ட் பாலர் பாடசாலையின் காகிதத் திருவிழா நாளை மறுதினம் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் வேர்ல்ட் பாலர் பாடசரலையின் பணிப்பாளர் ஏ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம், கௌரவ விருந்தினர்களாக கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பி.தனபாலசிங்கம், AB பவுண்டேஷன் தலைவர் எஸ்.ஞானந்த சர்மா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## சிறார் மகிழ்களம் திறப்பு விழா

(கொடிகாமம்)

நுணாவில் கனடா அபிவிருத்திச் சங்க அனுசரணையில் அமைக்கப்பட்ட நுணாவில் சிறார் மகிழ்களம் திறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நுணாவில் மேற்கு தேவாலய வீதி கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு, கௌரவ விருந்தினராக சாவகச்சேரி தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஆர்.ராஜபக்ஷ ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-114)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் உடைந்த மோதிரம் அறுந்த பட்டம் வந்தால்

எனது மோதிரக் கல்லை கழற்றி ஒருவரிடம் காட்டுகிறேன். பிறகு அந்த கல்லை இடுக்கிக் கொண்டு திரவம் கழுவுகிறேன். அது நீர் போல தான் உள்ளது. கழுவி எடுக்கும் போது அந்தக் கல் உடைகிறது. முழுவதுமாக உடையவில்லை. இருந்தாலும் அது ஓரளவு உடைந்து கிடைக்கிறது.

நான் வணங்கிய கோவில் ஒன்று கற்பக்கிரகமும் ஒரு பரிவார மூர்த்தியும் பாழடைந்து கிடக்கக் கனவு கண்டேன். நன்றாக பறந்த பட்டம் ஒன்று கீழே வந்து குத்தவும் பிறகு நான் அதை கையில் எடுத்துவிட்டேன். பழுது அடையவில்லை. ஆனால் என் கையில் வந்ததும் அதன் நிறம் சிவப்பாக மாறியது. முதன்மை நிறம் வெள்ளையும் நீலமும் கலந்த கட்டம் போட்ட பட்டம். ஒரே மனசு சஞ்சலமாக உள்ளது. வலது கண்ணும் துடிக்கிறது. ஒரே பயமாக உள்ளது. தயவுசெய்து எனக்கு பதில் விரைவில் தருவீர்களா? நான் என்ன பரிகாரம் செய்ய வேண்டும். உங்கள் கனவுக்குப் பலன் சிறிது மனச்சஞ்சலமான நேரம் இது உங்களுக்கு. மன அழுத்தம், மனச்சஞ்சலம் எல்லாம் மாறிமாறி உங்களை வாட்டுகிறது.

எங்கே போனாலும் ஒரு பாதுகாப்பின்மை மனநிலை (Feeling of insecurity) வந்து விடுகிறது. இது தான் உங்கள் கனவின் வழியே பிரதிபலித்திருக்கிறது. கனவில் அறுந்த பட்டம் கையில் கிடைப்பது ஏதோ ஒரு கடந்த கால நிகழ்வு மீண்டும் உங்களை வந்து பாதிக்கக்கூடிய சாத்தியக் கூற்றை உணர்த்துகிறது. மேலும் அது கையில் கிடைத்ததும் இரத்த நிறமாக மாறுவது உங்கள் குற்ற உணர்வை பிரதிபலிக்கிறது.

மோதிரக் கல்லைப் பொறுத்தவரை கனவு சிம்பாலிசமும் இந்திய கலாசாரத்தையும் சேர்த்துப் பார்க்கையில் இந்தக் கனவு திருமணம் சம்பந்தப்பட்ட உறவைக் குறிப்பதாகவேபடுகிறது. மோதிரம் உடைவது என்பது திருமணம் சம்பந்தப்பட்ட உங்கள் கவலைகளை வெளிக்காட்டுகிறது. திரவம் என்பது கண்ணீர் என்றும் கொள்ளலாம் நிறைய அழுதிருக்கிறீர்கள் என்ன நினைக்கிறேன்.

### பரிகாரம்

இந்தக் கனவைப் பொறுத்தவரையில் கொஞ்சம் ஆபத்தைக்குறிக்கும் கனவு தான். ஆகவே நீங்கள் உடனே கடவுள் நம்பிக்கை இருந்தால் உங்கள் இஷ்ட தெய்வத்தை நேரில் சென்று தரிசித்து வந்தால் ஓரளவு மனச்சஞ்சலம் விலகும். போகையில் குடும்பத்தாருடன் (திருமண உறவுடன்) செல்வது நலம். மேலும் ஒரு புண்ணிய காரியம் செய்து உங்கள் குற்ற உணர்வை போக்கிக் கொள்ளுங்கள். ஏதோ ஒரு நன்கொடை அல்லது இல்லாதவர்களுக்கு உதவி என உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். அதோடு இந்தக் காலகட்டத்தில் கொஞ்சம் முன் ஜாக்கிரதை உணர்வோடு நடந்து கொள்ளுங்கள். தியானம் மாதிரி மனதை அமைதிப்படுத்தும் பயிற்சி செய்யுங்கள்.

## இராசி பலன்

**மீனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்** துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய நட்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தாய்வழி ஆதரவு பெருகும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**கடகம்** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும, தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்

**விருச்சிகம்** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**துலாம்** விட்டுக் கொடுத்து செல்வதால் வெற்றி காண வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, காரிய அலைச்சல்கள் கூடும் நாள்.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம், பாக்கிகள் வசூலாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சந் | ராகு |
| | இராசி பலன் | | |
| | சந்திராஷ்டமம் அனுசம் | | |
| சனி, கேது குரு, சுக் | சூரி, புத | செவ் | |

**12.12.2019**

கார்த்திகை 26, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு

பூரணை முன்னிரவு 11-41 மணிவரை

ரோகினி முற்பகல் 7.36 மணிவரை

சுபநேரம் 7.50-9.20 மணிவரை

இராகுகாலம் 1.50-3.20 மணிவரை

விநாயக விரதாரம்பம்

வளவன்

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-20 காரைதீவு வீதியில் ஆதன இலக்கம் 480/40 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என்னும் பெயரில் ஆதனப் பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கைச் சேர்ந்த அல்பேட் செறின்ரன் 1 ஆம் பகுதியாகவும் அதே முகவரியைச் சேர்ந்த அல்பேட் யூட் 2 ஆம் பகுதியாகவும் சேர்ந்து சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய முடியப்பு றெமிடியஸ் அவர்களின் முகதாவில் 24.03.2016 ஆம் திகதியிடப்பட்ட 1286 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த 1286 ஆம் இலக்க பிரிவிடல் உறுதியுடன் ஆதன அட்டவணையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் ஆதனமானது 1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காலஞ்சென்ற தமது பெற்றோராகிய சூசை அல்பேட் பெண் எட்லீனம்மா என்பவர்களால் சின்னன் இராமு கைம்பெண் பூமணி என்பவரிடம் இருந்து கொள்வனது செய்ததன் பொருட்டு நிறைவேற்றப்பட்ட தற்போது தமது கைவசமற்றிருக்கும் உறுதி மூலம் தமது பெற்றோரின் சொந்தமும் ஆட்சியுமாக தமது பெற்றோர் இறந்த பின் அவர்களது வாரிசுக்களாகி தமது சொந்தமும் ஆட்சியுமானது என குறித்த 1286 ஆம் இலக்க உறுதியில் உரித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதன அட்டவணை வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை சூரியவெளி நெற்பரப்பு (4) நான்கு இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் யு.சந்தியப்பிள்ளை அவர்களால் 1978.02.27 ஆம் திகதி 097 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் துண்டுகள் 5,6 எனக் காட்டப்பட்டுள்ளது. இது மீண்டும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 2016.03.02 ஆம் திகதி 3082 ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் துண்டு 1,2,3 எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன்படி நெற்பரப்பு (3) மூன்று குளி (06.55) சைபர் ஆறு தசம் ஐந்து ஐந்து இதில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள நெற்பரப்பு 1 (ஒன்று) குளி 07.39 இதற்கு எல்லை.

கிழக்கு:- சாமிநாதன் குணசீலனின் ஆதனம்

வடக்கு:- ஒழுங்கை

மேற்கு:- குறித்த 3082 ஆம் இலக்கப்படத்தில் துண்டு மூன்று எனக் காட்டப்பட்ட பாதை

தெற்கு:- குறித்த 3082 ஆம் இலக்கப்படத்தில் துண்டு இரண்டு எனக் காட்டப்பட்ட ஆதனம் தற்போது அல்பேட் செறின்ரனின் ஆதனம். இதடங்கலும் குறித்த 3082 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 3 எனக் காட்டப்பட்ட பாதையை பாவிக்கும் உரித்தும் மேலே சொல்லப்பட்ட அல்பேட் யூட்டுக்கு பிரித்து நிந்தமாக விடப்படும் ஆதனம்.

தற்போது அல்பேட் யூட் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அல்பேட் யூட் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது இல:- காரைதீவு வீதி,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர், மாநகர சபை.

(C-849)

# யாழ்.சர்வதேச விமான நிலையத்திற்கு இந்தியா 300 மில்லியன் ரூபா நிதி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு உதவி செய்வதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய 300 மில்லியன் ரூபாயை உதவித் தொகையாக இந்தியா வழங்கவுள்ளது.

கைத்தொழில் ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை நேற்று புதன்கிழமை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்தித்த போதே குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதேவேளை, சர்வதேச விமான நிலையத்தின் பயணிகளுக்கான மற்றும் பொதிகளை சோதனை செய்வதற்கான இடங்களை அபிவிருத்தி செய்வதற்கு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டில் ஏழ்மையை ஒழிக்க ஜனாதிபதி அதீத கவனம்

## நாமல் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் பாரிய பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டில் ஏழ்மையை ஒழிக்க ஜனாதிபதியும் பிரதமரும் அதீத கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-2)



சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்

திரு.மரியாம்பிள்ளை மரியதாஸ்

(B.A. M.A. in Dev st. PGDE. SLTS.1)

சேவை விபரம்

புத்/புனித மரியாள் ம.வி. 12.05.1989-02.03.1993
யா/யாழ்.மத்திய கல்லூரி 03.03.1993-27.10.2017
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி 28.10.2017-18.01.2018
யா/யாழ்.இந்துக்கல்லூரி 19.01.2018 இல் இருந்து




எமது கல்லூரி ஆசிரியர் திரு.மரியாம்பிள்ளை மரியதாஸ் அவர்கள் இன்று தனது சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அவரை வாழ்த்துவதுடன் அவரையும் அவர் குடும்பத்தினரையும் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரி,
ஆசிரியர் கழகம்.

(C-8503)

YAMAHA வழங்கும்
புத்தாண்டு பரிசு மழை

சிறப்பு விலைத் தள்ளுபடி
15,000/= முதல் 125,000/= வரை

Fascino Scooter
ஒன்றை கொள்வனவு செய்து



20000/=
பெறுமதியான
Oppo AlK
2 Gb Ram 32 Gb
Memory ஒன்றை
இலவசமாக பெற்றுக்
கொள்ளுங்கள்

Fz-SV.3
ஒன்றை கொள்வனவு செய்து



25,000/=
பெறுமதியான
Oppo A5S
(Finger Print)
ஒன்றை
இலவசமாக பெற்றுக்
கொள்ளுங்கள்

நிபந்தனைக்குட்பட்டது.
தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு மட்டுமே...

இச் சலுகை டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் இடம் இருந்து மட்டுமே.
உடன் பதிவுக்கு: 077 554 5843/077 662 3824
காட்சியறை: 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


(C-8492)

# கற்றலில் குறைபாடுடைய மாணவர்களின் பின்னணி

கற்றலில் குறைபாடுடைய மாணவர்களின் பின்னணி எவ்வாறு உள்ளது என்பதை இனங்காண்பதற்காக யுத்தம், வறுமை, இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு மீளக் கட்டியெழுப்பப்படும் இடங்களிலுள்ள மாணவர்கள் கற்றலில் பல்வேறு சிக்கல்களையும் இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், தனிப்பட்ட காரணங்கள் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதைப் பற்றி நோக்கலாம்.

பாடசாலையில் பல்வேறு விதமான செயற்பாடுகள் நடைபெறுகின்ற போதிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடே பிரதானமாகக் காணப்படுகின்றது. மாணவர்கள் பாடசாலையை நோக்கி வருவதும் கற்றல், கற்பித்தலுடன் ஒழுக்கச் செயற்பாடுகளைப் பயில்வதற்குமே ஆகும். இதனடிப்படையில் பாடசாலையில் கிடைக்கும் வளங்களை உச்சளவில் பயன்படுத்தி வினைத்திறன், விளைதிறன் கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புவதே இலக்காகக் காணப்படுகின்ற போதிலும் இவ்வாறு கற்றலில் பின்தங்கும் மாணவர்களுள்ள போது குறிப்பிட்ட இலக்கை அடைவது கடினமானதாகும். கல்வி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் குறித்த மாணவர்களை மட்டுமல்லாது மாணவர்களைச் சார்ந்த சமூகத்தையும் பாதிக்கும். அந்த வகையில் பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும் இடை நிலைப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் குறைவாக இருப்பதற்கான காரணிகளை ஆராய்வோம்.

ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் அவனது குடும்பச் சூழல் முதன்மை வகிக்கின்றது. இப் பிரதேசமானது பின்தங்கிய பிரதேசமாக இருப்பதுடன் யுத்தம், வறுமை போன்ற காரணிகளை எதிர்கொண்டதோடு விவசாயத்தை தமது பிரதானமான பொருளாதாரமாகக் கொண்டுள்ளனர். அத்துடன் தாய், தந்தை இருவருமே வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு செல்லல், யுத்தத்தில் தாய், தந்தை கொல்லப்பட்டிருத்தல், காணாமல் போயிருத்தல், வறுமை காரணமாக உறவினர் வீடுகளில் தங்கி நிற்க விடுதல், தாய், தந்தையரின் அக்கறையின்மை , தாழ்வு மனப்பான்மை, அறியாமை, கல்விக்காக பணம் செலவு செய்ய விரும்பாமை, அடிப்படைத் தேவைகள் சரியாகப் பூர்த்தி செய்யப்படாமை, தாய், தந்தையர் வேறு திருமணங்கள் செய்தல் இவ்வாறு பல்வேறு காரணங்கள் மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டாமைக்கான காரணங்களாகக் காணப்படுகின்றன.



இதேபோன்று பாடசாலைச் சூழலில் காணப்படுகின்ற சில செயற்பாடுகளும் மாணவனின் கற்றல் செயற்பாடுகள் பின்னிற்பதற்கு துணை போகின்றன. பாடசாலையில் கற்பித்தலுக்குப் பொருத்தமான சாதனங்கள், ஆய்வு கூட வசதிகள் போதுமான அளவு இன்மையால் ஆசிரியர்களால் பொருத்தமான கற்பித்தல் முறைகளையும் நுட்பங்களையும் கையாள முடியாதுள்ளமை, ஒரு ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களைக் கற்பிக்கும் போது ஏற்படும் சலிப்புத் தன்மை, சக பாடிகளின் அதீத தொடர்பு, ஆசிரியுர்களின் கடுமையான கண்டிப்பு, சொற் பிரயோகங்கள், ஆசிரியர்-மாணவர் தொடர்பாடல்கள் , ஆசிரியர் மீதான வெறுப்பு. இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்கள் கல்வி மீது அக்கறையின்மையைத் தூண்டுகின்றது.

இதனைவிட மாணவர்களின் தனிப்பட்ட காரணங்களும் அவனின் கல்விச் செயற்பாடு பின்னோக்கிச் செல்லக் காரணமாக அமைகின்றது. மாணவர்களின் உடல், உளக் குறைபாடுகள், மொழியைப் பயன்படுத்துவதில் அக்கறையற்ற நிலையில் உள்ளமை, கேட்டல், வாசித்தல், எழுதுதல் போன்றவற்றில் ஆர்வம் இன்மை, துறைகளுக்கு காட்டும் அக்கறையை கற்றலின் மீது காட்டாமை, சரியான வழிப்படுத்தல் இன்மை, விளங்காத் தன்மை, மேலதிக கல்வி வசதி இல்லாமை, தொலைபேசிப் பாவனை இவ்வாறு பல்வேறு பிரச்சினைக் கொண்ட பிள்ளைகள் கற்றலில் பின்னடைவை எதிர்கொள்கின்றனர். போட்டி நிறைந்த இன்றைய உலகில் கல்வி முக்கியமானதாகவுள்ளது. கற்றலில் பின்னடைவாக உள்ள மாணவர்களில் 75 வீதமான மாணவர்களின் குடும்பப் பின்னணி பரிதாபமாகவே உள்ளது. பிள்ளையின் கல்வியில் குடும்பம் கவனம் செலுத்துதல் என்பது அவனை ஒரு படி முன்னோக்கித் தள்ள ஏதுவாக இருக்கும். பாடசாலையில் கற்பதை வீட்டில் கற்பதற்கும், பயிற்சிகளைச் செய்வதற்கும் வீட்டுச் சூழல் கட்டாயம் இடம் கொடுக்க வேண்டும். பிள்ளைக்கான அன்பு, அரவணைப்பு, ஆலோசனை என்பவற்றுடன் கற்பதற்கான சூழலையும் வீட்டில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அத்துடன் ஆரம்பக் கல்வி சரியாக வழங்கப்படாமையினரல் மாணவர்கள் இடைநிலைப் பிரிவில் கற்றலில் பின்னடைவை எதிர்கொள்கின்றனர். எழுதுதல், வாசித்தல், கிரகித்தல், கற்பித்தலை விளங்கிக் கொள்ள முடியாத தன்மை என்பன காணப்படுகின்றன. ஆகவே மாணவர்களின் ஆரம்பக் கல்வி சரியாக அமைந்தாலே இடை நிலைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வெற்றியளிக்கும். அத்துடன் மாணவர்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகளைத் தனிப்பட்ட ரீதியில் அணுகித் தீர்வினை எடுக்க நல்ல ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும். இதற்காக வீட்டிலும் பாடசாலையிலும் ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும். இதற்காக வீட்டிலும் பாடசாலையிலும் ஆலோசனை வழிகாட்டல்களை கிழமையில் ஒரு தடவையாவது மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் கற்றலில் பின்னடைவைத் தடுக்க அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து செயற்படுவதன் மூலமே விருத்தியடைய வாய்ப்புள்ளது.

அந்த வகையில் பெற்றோருக்குப் பிள்ளைகளின் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பெற்றோரின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு, வழிகாட்டல் ஆலோசனைச் சேவையில் பெற்றோர்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் பெற்றோருக்குப் பிள்ளையின் கல்வி மீது ஆர்வத்தை தூண்டுவதோடு மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் குறைக்கலாம்.

இடர்பாடுகளுக்கு உட்படும் மாணவர்களுக்குப் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் குறைந்தளவே காணப்படுகின்றது. எனவே பாடசாலைச் சமூகமும் ஆலோசனைக் குழுவும் இணைந்து மாணவர்களை வழிப்படுத்துவதனூடாக கற்றலில் ஆர்வத்தை அதிகரிப்பதோடு சிறந்த பெறுபேறுகளையும் பெறலாம். அதனூடாக பாடசாலையை மட்டுமல்லாது இப் பிரதேசத்தையும் சிறந்ததொரு வளமுள்ள பிரதேசமாக மாற்றியமைக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

வினோஜினி கிறிஸ்த்தோத்திரம்
ஆசிரியை, மு/விநாயகபுரம் அ.த.க.பாட சாலை.

# மீண்டும் குண்டுச் சத்தம் கேட்காத ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்

## ஆளுநர் முஸம்மில் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் குண்டுச் சத்தம் கேட்காத ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்மென வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். "உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதலின் பின்னர் விகாராதிபதி இந்தப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்களைப் பாதுகாத்தார்.

மேலும் நாம் அனைவரும் மனிதர்கள். அத்துடன் ஒன்றை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். யார் ஒருவர் இந்த உலகில் பிறக்கிறாரோ, அதன்போதே அவர் இறப்பையும் தன்னுடன் அழைத்து வருகிறார். எனவே இதனை விளங்கிக் கொண்டால் இந்த உலகில் வாழ்வது மிகவும் இலகுவானது. நாம் அந்த வாழ்க்கைக்குத் தயாராக வேண்டும்.

முழு நாட்டிலும் முஸ்லிம் மக்களுக்கும் பௌத்த மக்களுக்கும் இடையில் சற்று நம்பிக்கையின்மை காணப்படுவதை நாம் மறுக்க முடியாது.



நாம் அதனை இல்லாமல் செய்ய வேண்டும். எமது மார்க்கத்திற்கு அமைய நாம் தீவிரவாதத்தை எதிர்க்கிறோம். இலங்கையில் நடந்த சம்பவத்தை உலக தீவிரவாத சதிகளாகவே நாம் காண்கிறோம். இது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைத்து ஆராய்ந்து வருகிறார்.

இந்த நாட்டில் மீண்டும் குண்டுச் சத்தம் கேட்காத ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதனை உருவாக்க எம்மால் முடியும்" என தெரிவித்தார். (இ-7)

## ஒரு மாத காலத்திற்குள் மோசமான சம்பவங்கள்

# அச்சம் நிறைந்த யுகத்தில் மீண்டும் பயணிக்கின்றோமா?

## மங்கள கேள்வி

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து ஒருமாத காலத்தை எட்டியுள்ள நிலையில் ஒரு கடத்தல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரான சுவிட்சர்லாந்து தூதரக ஊழியர் தற்போது நகைப்பிற்கிடமான வகையில் குற்றவாளி ஆக்கப்பட்டிருக்கின்றார் என்றும் நாம் மீண்டும் அச்சமும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையும் கொண்ட பள்ளத்தை நோக்கிப் பயணிக்கின்றோமா? என்று பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.**

முன்னாள் நிதியமைச்சர் மங்கள் சமரவீர அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் நேற்று பதிவொன்றைச் செய்திருக்கிறார். அப்பதிவிலேயே இவ்வாறு கேள்வியெழுப்பப்பட்டது.

மங்கள சமரவீரவின் முழுமையான டுவிட்டர் பதிவு வருமாறு,



"ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து ஒருமாதகாலத்தை எட்டியுள்ள நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவின் நெறிமுறைகள் செயற்பட ஆரம்பித்திருக்கின்றன.

ஊடக நிறுவனமொன்றின் ஊடகவியலாளர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அதேபோன்று ஒரு கடத்தல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரான சுவிட்சர்லாந்து தூதரக ஊழியர் தற்போது நகைப்பிற்கிடமான வகையில் குற்றவாளி ஆக்கப்பட்டிருக்கின்றார். இவ்வாறான மோசமான சம்பவங்களால் மீண்டும் அச்சமும் தனிமைப் படுத்தப்பட்ட நிலையும் உள்ள பள்ளமொன்றை நோக்கிச் செல்கின்றோமா?" என சந்தேகத்துடன் கேள்வியெழுப்பியுள்ளார். (ஜ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு DR த.சத்தியமூர்த்தி

அன்றும், இன்றும் என்றும் மக்கள் சேவைக்கு மதிப்பு நல்கி, மாண்பு மிகு சேவை ஆற்றி உயர்ந்து நிற்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் தவப் புதல்வன் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் உயர்திரு DR த.சத்திய மூர்த்தி அவர்கள் தமிழ் அதிகாரிகளில் ஊழல் அற்ற சிறந்த அதிகாரியாக ஐவரில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டமையை கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர்கள் சார்பாக பாராட்டி வாழ்த்துகின்றோம் (சி-8504)






கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம் கிளிநொச்சி.



கலாபூஷணம் திரு.எல்.திலகநாயகம் போல் அவர்களின் 10 ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக நல்லூர் "சோமராகம்" இசைமன்றம் நடாத்தும்

"திலகார்ப்பணம்"





காலம்:- 13.12.2019 வெள்ளிக்கிழமை

இடம்:- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம்

நேரம்:- பிற்பகல் 3 மணி

**பிரதம விருந்தினர்**

கலாபூஷணம். திருமதி நேசபூபதி அனுவை நாகராஜன் அவர்கள்

(மூத்த இசைக்கலைஞரும், ஓய்வுபெற்ற ஆசிரியரும்)

**சிறப்பு விருந்தினர்**

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள்

(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)

**சங்கீதபூஷணம் எல்.திலகநாயகம் போல்** அவர்களின் ஞாபகார்த்தமாக கௌரவிக்கப்படுபவர்

கலாபூஷணம் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன்

(மூத்த வயலின் இசைக் கலைஞர், ஓய்வுபெற்ற விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்).

ஏற்பாட்டுக் குழுவினர் (சி-8507)




தென்மராட்சி கல்வி வலயத்தின் மாற்றுவலுவுடையோர் தினவிழா அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலையில் தென்மராட்சி கல்வி வலய வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவபூமி அறக்கட்டளை ஸ்தாபகர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், சிறப்பு விருந்தினராக கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திருமதி ஆர்.வாசுகி, தென்மராட்சி கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் வ.கனகரத்தினம், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)

# தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் கோட்டாவிடம் இல்லை



## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**தமிழர்களுக்கான பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினரின் ஊரெழுச்சி வேலைத்திட்டத்திற்கு அமைய ஒதுக்கி அமைக்கப்பட்ட பூநகரி வாடியடி சந்தைக்கான கட்டடத்தொகுதியை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு பதவி ஏற்ற நாளிலிருந்து நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளால் மட்டும் தெரிவு செய்யப்பட்டேன் என்கிற மமதையில் கூறிக்கொண்டு இருக்கிறார். இதுவரை வடக்கு மாகாணத்திற்கு ஆளுநரைக் கூட தெரிவு செய்ய மனம் இல்லாதவர் தமிழர்களுக்கான பிரச்சினைகளைத் தீர்ப்பாரா? இந்திய விஜயத்தின் போது இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் விடயங்களை இந்தியாவில் வைத்தே நடைமுறைப்படுத்த முடியாது எனக் கூறுபவர் எமக்கு அதிகாரங்களை தருவாரா? எமது மக்களின் இலட்சக்கணக்கான கொலைகளுக்கு காரணமான ஒரு போர்க்குற்றவாளியாக இருப்பவர் எம்மை இன்னும் அரவணைத்துச் செல்லும் மனப்பாங்கிற்கு அவர் வரவில்லை. எமக்கான உரிமைகள் கிடைக்கப் பெற்றால் எமது அபிவிருத்திப்பணிகளை நாம் சுயமாகவே மேற்கொள்வோம் என மேலும் தெரிவித்தார். (9)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(மல்லாவி)

அதில இலங்கை புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்களின் ஒரு இலட்சம் ரூபா நிதி அனுசரணையில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளான மு/அமைதிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் மு/ஆரோக்கியபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கு எதிர்வரும் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கற்றல் உபகரணங்களை யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் ஆகிய புகையிரத நிலையங்களின் அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் இணைந்து கடந்த திங்கட்கிழமை மாணவர்களுக்கு வழங்கி வைத்தனர். (9-15)

### கிளிநொச்சியில் முதன்முறையாக

## பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதி லிங்க தரிசனம்

(பூநகரி)

பாரதத்தின் வெவ்வேறு மாநிலங்களிலுள்ள மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்கங்களை ஒரே இடத்தில் தரிசிக்கும் நிகழ்வு முதன் முறையாக கிளிநொச்சியில் எதிர்வரும் 20,21,22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பிரம்ம குமாரிகள் இராஜ யோகா நிலையத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் இத் தரிசனம் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் ஆன்மீக பட விளக்க கண்காட்சி, மனச்சுமையை இறை வனிடம் கொடுப்பதற்கான ஆன்மீக யாக குண்டம், இறைவனுடன் நெருக்கமாக அனுபவத்தை பெறுவதற்கான தியானம் போன் றன முற்றிலும் இலவசமாக மக்களுக்கு வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9-84)

## அவசர கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடக்குமாகாணத்திலுள்ளதொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல்நாளை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள NEC கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் ஆசிரிய சேவைக்கான ஆவணங்களின் பிரதிகளைக் கொண்டு வருமாறு தொண்டராசிரியர் ஒன்றிய தலைவர் அறிவித்துள்ளார். (9)

## அடிக்கடி தடைப்படும் பேருந்து சேவை சீரமைக்குமாறு பூநகரி மக்கள் கோரிக்கை

(பூநகரி)

கிளிநொச்சி இ.போ.ச.சாலையில் இருந்து முக்கொம்பன், செக்காலை, அரசபுரம் சேவையில் ஈடுபடும் ஒரே பேருந்து அடிக்கடி தடைப்படுவதால் அப் பகுதியில் இருந்து வைத்தியசாலைக்கு செல்வோரும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வோரும் பெரும் சிரமமடைவதோடு அப்பகுதி மாதர் சங்கத்தினரிடம் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக மாதர் சங்க அமைப்பினர் சாலை முகாமையாளரை தொடர்பு கொண்ட போது பேருந்து இருக்கிறது சாரதி இல்லை என பதில் அளிப்பதாக மாதர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். இச் சேவையை ஒழுங்காக நடத்த முடியாவிட்டால் தனியார் போக்குவரத்துச் சங்கத்திடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விட்டுள்ளனர். (9-84)




## தொழில் முயற்சியாண்மை பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வரையறுக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கூட்டுறவு சங்கத்தினால் கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட சுயதொழில் முயற்சியாண்மை வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு சிறந்த வியாபாரத் திட்டங்களைத் தயாரித்த சுமார் முப்பது பேருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். (9-281)

## பச்சிலைப்பள்ளி பிரதேச பண்பாட்டு பெருவிழா









(முறிகண்டி)

பச்சிலைப்பள்ளி பிரதேச பண்பாட்டு பெருவிழா பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பரமோதயம் ஜெயராணி தலைமையில் நேற்று நாவலர் அரங்கில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கலைஞர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பளை இரட்டைக்குணி கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து கலாசார விழுமியங்களை உள்ளடக்கிய ஊர்திகளின் பவனியுடன் விருந்தினர்கள் விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டதை தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச கீத இறுவெட்டினை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சத்தியசீலன் வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பசுந்துளிர் நூலின் 7 ஆவது பாகம் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (9-100)

# சந்தை கட்டடம் திறந்து வைப்பு





(நெளுக்குளம்)

வவுனியா நகரசபைக்குட்பட்ட மரக்கறி சந்தை கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டு நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

நகரசபை தலைவர் இ.கௌதமன் மற்றும் உபநகரபிதா சு.குமாரசாமி, செயலாளர் இ.தயாபரன் மற்றும் சபையின் உறுப்பினர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

குறித்த சந்தைக்கட்டடம் நகரசபையின் வேண்டு கோளுக்கிணாங்க, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 25 மில்லியன் ரூபாய் நிதியில் நவீன முறையில் ஒரு மாடியினை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் மேல் தளத்தில் ஆறு கடைகளும், கீழ் தளத்தில் 25 பேர் வியாபாரம் மேற்கொள்ளக்கூடிய வகையில் ஒதுக்கப்பட்ட பகுதிகளும் அமைந்துள்ளது. குறித்த பகுதியில் முன்னர் வியாபாரம் மேற்கொண்டவர்களுக்கு கீழ் கடைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய கடைகள் திறந்த கேள்வி அறிவித்தல் மூலம் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# க்ரைச்சி பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்

(அக்கராயன்)

கரைச்சி பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு-செலவுத்திட்டம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 20 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் கிடைக்கப் பெற்று மேலதிக 5 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் வரவு-செலவு திட்டத்தை சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்தே வாக்களித்தோம். 10 வீதமாக அறவிடப்படுகின்ற ஆதன்வரியை ஐந்து வீதமாக குறைக்குமாறு நாம் பிரதான கோரிக்கையாக முன்வைத்தோம். அதனை கரைச்சி பிரதேச சபையின் ஆளும் தரப்பினர் ஏற்றுக் கொள்ளவில்லை எனச் சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். (9-350)



இளைஞர் நற்பணி ஒன்றியத்தினரால் மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம்- லண்டன் கிளையினரின் அனுசரணையில் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட் டத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடசாலைகளான மு/அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயம், மு/முள்ளிவாய்க்கால் மேற்கு க.உ.வி. மற்றும் மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த மிகவும் வறுமை யின் மத்தியில் கல்வியினை தொடர்கின்ற 153 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு 232,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணப் பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் மு/ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலையில் மிகவும் வறுமையின் மத்தியில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 3 மாணவர்களுக்கு தலா 20,000 பெறுமதியான 3 துவிச்சக்கர வண்டிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

# உயர்நிலை நகரமாக மாறும் கிளிநொச்சி

## அபிவிருத்திப் பணிகள் 2020 இல் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரத்தினை நிலைபேறான இரண்டாம்தர உயர்நிலை நகரமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கரைச்சிப்பிரதேச சபையால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 1300 மில்லி யன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள உட்கட்டு மானப்பணிகளை நேரடியாக கள ஆய்வு மேற்கொள்வதற்காக குறித்த திட்டத்தின் பணிப்பாளர் காமினி விஜயவர்த்தன தலைமையி லான குழுவினர் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடினர்.

இதன்போது கரைச்சிப் பிரதேச சபையினால் முன்மொழியப்பட்ட நகராக்கத்திற்கான திட்ட வடிவங்களையும் முன்மொழிவுகளையும் நேரில் பார்வையிட்டு இறுதி செய்தனர்.

இந்த கலந்துரையாடலிலும் களப்பயணத்திலும் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளருடன் உப தவிசாளர் சி.தவபாலன், உறுப்பினர்களான சிவமோகன், சுப்பையா, நகர வட்டார உறுப்பினர் வித்தியானந்தன் மற்றும் சிவனேசன், செயலாளர் சண்முகதாஸன், கரைச்சிப் பிரதேச சபையின் திட்ட அலுவலர் தனராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்தத் திட்டமிடலின் மூலம் கிளிநொச்சியில் 200 மில்லியன் ரூபா செலவில் நகர மண்டபமும் பொதுச் சந்தையில் 280 மில்லியன் ரூபா செலவில் வர்த்தகக் கட்டடத் தொகு தியும் கரடிப்போக்கு சந்தியில் 60 மில்லியன் ரூபா செலவில் கடைத் தொகுதியும் அச்சகமும் 280 மில்லியன் ரூபா செல வில் பசுமைப் பூங்காவில் சிறுவர்களுக்கான நீச்சல் தடாக் மும் 350 மில்லியன் ரூபா செலவில் நகர வீதிகளும் 90 மில்லியன் ரூபா செலவில் வடிகாலமைப்புக்களும் 100 மில்லியன் ரூபா செலவில் கழிவு முகாமைத்துவ பொறி முறைகளும் வாகனங்களும் 100 மில்லியன் ரூபா செலவில் பொது நூலகமும் ஆனையிறவில் சகல வசதிகளுடன் கூடிய பொது மலசலகூடமும் அமையவுள்ளன. இதற்கான பூர்வாங்கப் பணிகள் அனைத்தும் 2020 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டவுடன் அடுத்து வரும் 3 ஆண்டுகளில் இத்திட்டங்களுக்கான நிர்மாணப்ப்ணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்படும் என கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார். (9-315)




# துணுக்காய் பிரதேச பண்பாட்டு பெருவிழா









(கண்டாவளை)

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன் துணுக்காய் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த பண்பாட்டுப்பெருவிழா நேற்று முன்தினம் துணுக்காய் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச செயலாளர் திருமதி ச.லதுமீரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் பிரதான வீதியிலிருந்து பாரம்பரிய கலைகளையும் வாழ்க்கை முறைகளையும் சித்திரிக்கும் ஊர்தி பவனிகளுடன் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து பிரதேசத்தின் பல்துறை சார்ந்தோர்கள் விருது வழங்கி



கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மருதோவியம் இதழ் 03 நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (9-315-286)




தாயகம் அறக்கொடை நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் வன்னியிலுள்ள விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 180 சீருடைத் துணிகள் மற்றும் 180 காலணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலுள்ள சுகாதாரப் பணிமனை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

# பாரதம்

## பாரதியைப் புகழ்ந்து தமிழில் டுவிட் செய்த மோடி




Narendra Modi
@narendramodi

மகாகவி பாரதியார் என்றழைக்கப்படும் மாமனிதா சுப்பிரமணிய பாரதியின் பிறந்தநாளன்று அவரை நினைவு கூர்கிறேன். தேசப்பற்று, சமூக சீர்திருத்தம், கவிப்புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவா. அவரது எண்ணங்களும் பணிகளும் இன்றைக்கும் நம்மை எழுச்சியூட்டும் விதமாகவே உள்ளன.

10.3K 8:20 AM - Dec 11, 2019

2,735 people are talking about this

(சென்னை)

மகாகவி பாரதியாரின் பிறந்த தினத்தன்று அவரைப் புகழ்ந்து பிரதமர் நரேந்திர மோடி டுவிட்டரில் தமிழில் கருத்து வெளியிட்டார். மகாகவி பாரதியாரின் 137 ஆவது பிறந்த தினம் நேற்று புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

இந்நிலையில் பாரதியாரைப் புகழ்ந்தும் அவரது வரிகளை குறிப்பிட்டும் பிரதமர் மோடி டுவிட்டரில் கருத்து பதிவிட்டார். குறித்த பதிவில், "மகாகவி பாரதியார் என்றழைக்கப்படும் மாமனிதர் சுப்பிரமணிய பாரதியின் பிறந்த நாளன்று அவரை நினைவுகூர்கிறேன். தேசப்பற்று, சமூக சீர்திருத்தம், கவிப்புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவர். அவரது எண்ணங்களும் பணிகளும் இன்றைக்கும் நம்மை எழுச்சியூட்டும் விதமாகவே உள்ளன" எனப் பதிவிட்டார். (ஜ-2)

## கடுமையான பனிப்பொழிவால் அடுத்தடுத்து மோதிய 50 வாகனங்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடுமையான பனிப்பொழிவு காரணமாக வீதிகளில் வெளிச்சமின்மையால் 50 இற்கும் அதிகமான வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோதின.

அமெரிக்கா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் தற்போது கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது. பனிப்பொழிவால் பல்வேறு பகுதிகளில் வீதி விபத்துச் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.



இந்நிலையில் அமெரிக்காவின் ஐஓவா மாகாணத்தில் நிலவிவரும் பனிப்பொழிவு காரணமாக 50 இற்கும் அதிகமான வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாகின. (ஜ-2)

## அமெரிக்க-மெக்ஸிக்கோ எல்லைப் பிரச்சினை ட்ரம்பின் நிதி ஒதுக்கீட்டிற்கு தடை உத்தரவு

(வோஷிங்டன்)

அமெரிக்கா - மெக்ஸிக்கோ எல்லையில் சுவரைக் கட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஒதுக்கீடு செய்த 3.6 பில்லியன் டொலர் நிதிக்கு நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

டெக்சாஸின் எல் பாஸோவில் உள்ள அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி டேவிட் பிரையன்ஸ் 21 பக்க தீர்ப்பில் தடை உத்தரவை பிறப்பித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார். இந்நிலையில் குறித்த தடை உத்தரவு குறித்து கருத்து தெரிவித்த நீதித்துறை செய்தித் தொடர்பாளர், ட்ரம்ப் நிர்வாகம் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யும் எனக் கூறினார்.

இந்தத் தீர்ப்பு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு ஒரு பின்னடைவாக கருதப்படுகின்றது. ஏனெனில் 2020 நவம்பர் மாதம் இடம்பெறும் ஜனாதிபதித் தேரதலில் ட்ரம்ப் நிர்வாகம் தனது அறிக்கையில் எல்லையில் குறைந்தது 450 மைல் சுவரைக் கட்டுவதாக உறுதியளித்துள்ளது.

அத்தோடு இந்தச் சுவர் சட்ட விரோத எல்லைக் கடப்புகளைத் தடுக்கும் என்றும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வாதிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## நீண்டகால சர்ச்சைக் நஃப்டா ஒப்பந்தம்



இந்த ஒப்பந்தத்தில் நீடித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மூன்று நாடுகளுக்கிடையில் கடைசி நிமிட உரையாடல்கள் நடந்ததைத் தொடர்ந்து, துணைப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலான்ட் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மெக்சிகோவிற்கு சென்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

இதேவேளை, இந்த ஒப்பந்தம் நீண்ட காலத்தைக் கொண்ட கடினமான பேச்சுவார்த்தையாக இருந்ததாக குறிப்பிட்டுள்ள கிறிஸ்டியா ஃப்ரீலான்ட், அனைவரும் இணைந்து பணியாற்றியதன் மூலம் இதனை இறுதிக்கட்டத்துக்கு கொண்டுவந்ததாக குறிப்பிட்டார்.

பொருளாதார வளர்ச்சி அபிவிருத்திக்காக கடந்த 1994 ஆம் ஆண்டு 'வட அமெரிக்க தடையில்லா வர்த்தக ஒப்பந்தம்' (NAFTA) அமுல்படுத்தப்பட்டது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் இந்த வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்த்தார். மிக மோசமான ஒப்பந்தங்களில் இதுவும் என்று எனக் கூறிய அவர், தற்போதையை சூழலில் நஃப்டா ஒப்பந்தத்தால் அமெரிக்காவுக்கு எந்த நன்மையும் இல்லை என தெரிவித்தார். மேலும் இந்த ஒப்பந்தத்தில் தனக்கு திருப்தியளிக்கும் வகையில் மாற்றங்கள் செய்யாவிட்டால் நஃப்டா ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகும் என ட்ரம்ப் அறிவித்தார்.

## அசுரவேகத்தில் வளரும் இயந் நடுத்தர மக்களின் வாழ்க்

### இஸ்ரேல் பல்கலைக்கழகம் எச்சரிக்கை

(ஜெருசலேம்)

உலகில் நடுத்தர மக்களின் வாழ்க்கை வீழ்ச்சியடையப் போவதாக இஸ்ரேல் பல்கலைக்கழக ஆய்வாளர் எச்சரிக்கை விடுத்தார்.

கற்காலத்தில் ஆதிவாசியாக இருந்த மனிதன் தற்போது நாகரீக வளர்ச்சியின் உச்சத்தில் உள்ளான். தொழில்நுட்ப வளர்ச்சிகள் அதிகரிக்கவே பூமியை விட்டு அடுத்த கிரகமான செவ்வாயில் வாழ்விடத்தை அமைக்க ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறான். இது ஒருபுறம் இருக்க மனிதனின் பயன்பாடுகளால் இயற்கை கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகிறது.

பருவநிலை மாற்றம் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உலகில் அனைத்து நாடுகளிலும் பருவநிலை மாற்ற ஆர்வலர்கள் இயற்கை வளங்களைப் பாதுகாக்க கோரி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஐ.நா.சபை பருவநிலை மாற்ற மாநாடுகள் நடநதாலும் இது குறித்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு இல்லை.

வேலைப்பளுவை குறைக்க மனிதன் கண்டு பிடித்த இயந்திரங்களால் இன்று மனிதர்களுக்கே வேலை இல்லாமல் ஆகும் நிலை உள்ளன.

ரோபோக்கள் பயன்பாடு உலகில் அதிகரித்து வருகிறது. முதலில் விண்வெளி ஆராய்ச்சி மையம் போன்ற ஒரு சில இடங்களிலே பயன்படுத்தப்பட்ட ரோபோ தற்போது அநேக தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.



## உலகில் முதல் இளம் பிரதமராகும் பின்லா

(ஹெங்சிங்கி)

பின்லாந்து நாட்டில் 34 வயதான சன்னா மரின் என்ற பெண் பிரதமராகத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

பின்லாந்தில் தற்போது சமூக ஜனநாயகக் கட்சி தலைமையிலான 5 கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில் பிரதமராக இருந்த ஆண்டி ரின்னி, மீது அந்நாட்டு தபால் துறை வேலை நிறுத்தத்தை சரியாக கையாளவில்லை எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

எதிர்ப்புக்கள் வலுத்ததையடுத்து, அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். இதனையடுத்து போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த, சமூக ஜனநாயகக் கட்சியை சேர்ந்த 34 வயதான சன்னா மரின் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சன்னா மரின் தனது 27 ஆவது வயதில் அவரது சொந்த ஊரானடம் பியரில் நகர சபை தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டார்.

கடந்த 2015ஆம் ஆண்டு பின் லாந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், கடந்த ஜூன் மாதம் போக்குவரத் துத்துறை அமைச்சராக பதவியேற்றார்.

# சக்கு முற்றுப்புள்ளி
# தம் கைச்சாத்து!

(ஒட்டாவா)

**சர்ச்சைக்குரிய நஃப்டா ஒப்பந்தம தொடர்பாக நீண்டகாலமாக காணப் பட்டுவந்த முரண்பாட்டுக்கு தீர்வு காணும் முகமாக மெக்சிகோ மற்றும் அமெரிக் காவுடனான வட அமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் புதிய ஒப்பந்தத்தில் கனடா கையெழுத்திட்டது.**

இதையடுத்து மூன்று நாடுகளிடையே பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. இதில் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் அடுத் தடுத்து பேச்சுவார்த்தை நீண்டது. அதன் பின்னர் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் (ஞாயிறு) கனடா புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண் டும் என்றும் தவறினால் இந்த ஒப்பந் தமானது அமெரிக்காவுக்கும் மெக்சிகோ வுக்கும் இடையிலான இருதரப்பு ஒப்பந் தமாக மாற்றப்படும் என்றும் டிரம்ப் காலக்கெடு விதித்தார். அதன்பின்னர் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வாகனங்களுக்கு வரி விதிப்போம் என்றும் கூறினார்.

இந்த் காலக்கெடுவை அடுத்து, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையில் அமைச்சரவை அவசரமாக கூடி இதுபற்றி ஆலோசித்தது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கன டாவின் நலன்களை பாதுகாக்கும் வகையில் புதிய ஒப்பந்தத்தம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின. இதன் மூலம் வட அமெரிக்கா தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை சீரதிருத்தம் செய்வது தொடர்பான கனடா மற்றும் அமெரிக்கா குழுவினரி டையே உடன்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில், தொடர்ந்து ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து சர்ச்சைக்குரிய நஃப்டா ஒப்பந்தம் கையெழுத்தாகியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# இயந்திரங்களால்
# ாழ்க்கை பாதிப்பு

அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் சில பணக்காரர்கள் வீட்டு வேலைகள் செய்வதற்கு சிறிய ரக ரோபோக்களை பயன்படுத்துகின்றனர். அந்த அளவிற்கு மிக சாதாரணமான பொருளர்க ரோபோ மாறிவிட்டது.

இந்நிலையில், ரோபோக்களின் பயன்பாடுகளால் நடுத்தர மக்களின் வாழ்க்கை முடியப் போகிறது என இஸ்ரேல் பல்கலைக்கழகத்தைச் சேர் ந்த எதிர்கால நிபுணர் ரோய் ட்ரெசானா தெரிவித்தார்.

'ரோபோக்கள் மற்றும் இயந்திரங் களின் பயன்பாட்டால் நடுத்தர மக்களின் வேலைவாய்ப்புகள் பறிபோகும். உலகில் பல இலட்சக்கணக்கான மக்கள் ஏழ்மை நிலைக்கு வருவார்கள். ஆனால் சில பேர் மட்டும் பணக்காரர்கள் ஆவார்கள். உலகில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சியால் புதிய வேலை வாய்ப்புகள் உருவானாலும் ரோபோக்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்பாடுகளினால் மனிதர்கள் வேலை வாய்ப்புகள் பறி போவதை தடுக்க இயலாது.

அண்மையில அமெரிக்கா வில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொழிற் சாலையில் வெறும் 10 சதவீத மனிதர்களே வேலைக்கு தேவைப் படுகின்றனர். காரணம் தானிய ங்கல். வளர்ந்து வரும் நாகரிக உல கில் புதிய வேலை வாய்ப் புகள் உருவானால் பழைய வேலை கள் அழிந்து விடுமா? என்ற கேள்விகள் உள்ளன. ஆனால் பழைய வேலைகள் மறைந்து புதிய பணிகள் உரு வாவதற் கான வேகம் மாறிக் கொண்டே இருக்கிறது. அது மிகப்பெரியது.

குழந்தையை பார்த்துக்கொள் ளுதல், உணவகங்களில் சர்வர் போன்ற தொழில்களில் ஈடுபடும் ஒரு வரின் சம்பளம் வியத்தகு அள வில் குறையும். சில நேரங்களில் இது முந்தைய சம்பளத்தின் கால் பகுதி. இது ஒன்று அல்லது இரண்டு நபர்களின் பிரச்சினை அல்ல. இம் மாதிரியான இயந்திர பயன்பாட்டி னால் நடுத்தர மக்களின் வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்படும் என ரோய் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# ன்லாந்து பெண்

ஆட்சியில் இருக்கும் கூட்டணிக் கட்சி யைச் சேர்ந்த அனைத்து அமைச்சர்களும் 35 வயதிற்கு உட்பட்டவர்களே. இவர்கள் அனைவரும் பிரதமர் பதவிக்கு போட்டி யிட்டனர். இவர்களில் சன்னா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது குறித்து பேசிய சன்னா மரின், "நான் எனது வயதை ஒரு பொருட்டாகக் கருதியதில்லை. மக்களுக்கு என் மீது நம்பிக்கை ஏற்படுவதற் கான வழி குறித்து மட்டுமே சிந் திக்கிறேன்.

மேலும் நாம் செய்ய வேண் டிய பணிகள் இன்னும் நிறைய இருக்கின்றன" என தெரிவித்தார்.

தற்போது உலகில் உள்ள பிர தமர்களில் மிகவும் வயது குறை ந்த பிரதமர் இவர் தான். இதற்கு முன்பு நியூசிலாந்தின் பெண் பிரதமரான ஜெசிந்தா ஆர்டர்ன் (வயது-39) தான் வயது குறைந்த பிரதமராகக் கருதப்பட்டார். (ஐ-2)

# எதியோப்பிய பிரதமர் அடி அஹமது அலி அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்



(ஒஸ்லோ)

ஒஸ்லோ நகரில் கடந்த திங்க ட்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி யில் எதியோப்பிய பிரதமர் அபி அஹமது அலி அமைதிக்கான நோபல்பரிசை பெற்றுக்கொண்டார்.

மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக் கியம், வேதியியல் ஆகிய துறை களில் மகத்தான சாதனை படை த்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி கௌர விக்கப்படுகிறது.

இதற்கிடையில், 2019 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டோ க்ஹோமில் கடந்த ஒக்டோபர் 11 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அதில் எதியோப்பிய பிரதமர் அபி அஹமது அலி (வயது-43) அமைதிக்கான நோபல் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டார்.

எதியோப்பியாவின் நான்கா வது பிரதமராகப் பொறுப்பேற்ற பின் அபி அஹமது அலி அயல் நாடான எரித்திரிய ஜனாதிபதியு டன் மேற்கொண்ட சமரச நடவடி க்கைகளாலும் எதியோப்பியா நாட்டு மக்களின் வாழ்வாதா ரத்தை வளப்படுத்தவும் ஒளிமய மான எதிர்காலத்தை உருவாக் கவும் ஆற்றிய அரும்பணிக்காக அவருக்கு நோபல் விருது அறி விக்கப்பட்டது.

இந்நிலையில், 2019 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் விருது வழங்கும் நிகழ்ச்சி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற எத்தியோப்பிய பிரதமர் அபி அஹமது அலி அமைதிக்கான நோபல் பரிசைக் பெற்றுக்கொண்டார். (ஐ-2)

# சவுதி விமானிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சியை நிறுத்த அமெ.தீர்மானம்

(வோஷிங்டன்)

சவுதி அரேபியா விமானிக ளுக்கு வழங்கப்பட்ட பயிற்சியை நிறுத்த அமெரிக்கா தீர்மானித் துள்ளது.

புளோரிடாவிலுள்ள அமெ ரிக்கக் கடற்படைத் தளத்தில் பயிற்சி பெற்று வந்த சவுதி விமானப்படை விமானியால் அண்மையில் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்தனர்.

இதன்போது குறித்த விமானி அமெரிக்க பாதுகாப்பு படையி னரால் சுட்டுக்கொல்லப்பட்டி ருந்தார்.

இந்தநிலையில் புளோரிடா விலுள்ள 3 தளங்கள் மற்றும் பிற பகுதியிலுள்ள தளங்களில் சவுதி விமானிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சிகள் நிறுத்தப்பட் டுள்ளதாக அமெரிக்கா அறி வித்தது. அமெரிக்காவின் குறித்த அறிவிப்பு காரணமாக அங்கு பயற்சி பெற்று வந்த 300 சவுதி விமானிகள் பாதிக்கப்படுவார்கள் என கூறப்படுகின்றது. (ஐ-2)

# தமிழர் பாரம்பரிய உடையில் நோபல் பரிசு பெற்ற தம்பதி





(ஸ்டாக்ஹோம்)

சுவீடனில் நடைபெற்ற நோபல் பரிசளிப்பு விழாவில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தம்பதி வேட்டி, சேலையில் சென்று பரிசு பெற்றது பலரின் கவனத்தையும் ஈர்த்தது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும், அமெரிக்கப் பொரு ளாதார நிபுணருமான அபிஜித் பானர்ஜி மற்றும் அவரது மனை வியும் பிரெஞ்சு பொருளாதார வல்லுநருமான எஸ்தர் டுப்லோ ஆகியோர் இந்த ஆண்டின் பொரு ளாதார அறிவியல் துறைக்கான நோபல் பரிசுக்குத் தெரிவு செய் யப்பட்டனர்.

இந்த பரிசளிப்பு விழா, சுவீடனிலுள்ள ஸ்டாக்ஹோம் கன்சர்ட் அறையில் நடைபெற் றது. இதில் பரிசு பெற சென்ற அபிஜித் பானர்ஜி, தங்க நிற வோடர் வைத்த வேட்டியும், கறுப்பு நிற மேல் கோட்டும் அணிந்திருந்தார். அவரது மனைவி எஸ்தர், பச்சை மற்றும் ஊதா நிறம் கலந்த சேலையும், சிவப்பு நிற மேற்சட்டையும் அணிந்தி ருந்தார். தம்பதியர், தமிழர் பாரம்பரிய முறையில் வேட்டி, சேலை அணிந்து சென்று பரிசு பெற்றது பலரின் பாராட்டையும் பெற்றுள்ளது. (ஐ-2)

## இந்தியக் குடியுரிமைச் சட்டமூலத்தில் ஈழத்தமிழர்கள் உள்வாங்கப்படாமை

# பெரும் கவலை

## இராதாகிருஷ்ணன் வெளிப்படுத்தல்

(ஹற்றன்)

**இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டமூலத்தில் இலங்கைத் தமிழர்கள் உள்வாங் கப்படாமை பெரும் கவலையளிக்கின்றது என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**

குடியுரிமை திருத்தச் சட்டமூலம் தொடர்பாக அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமை திருத்த சட்டமூலத்தில் இந்தியர் அல்லாத பாகிஸ்தான் பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து குடியேறியவர்களுக்கு இந்தியக் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதற்கு எடுக்கப்பட்ட சட்டமூலம் பாராட்டுக்குரியது.

அதேவேளை எங்களுடைய வடக்கு-கிழக்கு மக்கள் மற்றும் மலையக மக்கள் உள்வாங்கப்படாமை மிகவும் கவலையளிக்கின்றது.

அந்தத் திருத்தச் சட்டமூலம் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்தியாவில் குடியேறியவர்கள் இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதில் இலங்கைத்



தமிழர்களான மலையக மக்கள் வடக்கு-கிழக்கு மக்கள் தொடர்பாக எதனையும் குறிப்பிடவில்லை. வடக்கு-கிழக்குத் தமிழர்கள் யுத்தம் காரணமாக இந்தியாவிற்கு இடம்பெயர்ந்தவர்கள். மலையக மக்களைப் பொறுத்த அளவில் அவர்கள் இந்தியாவிலிருந்து 200 வருடங்களுக்கு முன்பு இங்கு கொண்டுவரப்பட்டு மீண்டும் இந்தியாவிற்குத் திரும்பிச் சென்றவர்கள்.

அவர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. எனவே அவர்கள் இந்தியாவில் தாங்கள் வசிக்கின்ற பகுதிகளில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியாளர் ஊடாக இந்தியக் குடியுரிமை கோரி விண்ணப்பம் செய்திருக்கின்றார்கள்.

அவர்களுக்கு இந்தியக் குடியுரிமையைப் பெற்றுக் கொடுக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை மோடி மாத்திரமே நிறைவேற்ற முடியும்.

மேலும் வடக்கு-கிழக்கு தமிழர்கள் தொடர்பாக இலங்கைக்கு மீண்டும் திரும்ப விரும்புகின்றவர்களுக்கு அவர்களுக்கான வாழ்வாதாரம், வீடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் இந்த இரண்டு தமிழர்களும் இலங்கையிலும் குடியுரிமை இல்லாமல் இந்தியாவிலும் குடியுரிமை இல்லாமல் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இந்த விடயமானது கடந்த பல வருடங்களாக இழுத்தடிக்கப்பட்டு வருகின்றதை நாம் அறிவோம். எனவே எங்களுடைய நாட்டின் மீது அதிக கவனம் எடுத்து செயற்பட்டு வருகின்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்த விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி இதற்கான ஒரு நிரந்தரத் தீர்வை அவருடைய காலத்தில் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதனை அவரால் மாத்திரமே நிறைவேற்ற முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திருமலை துறைமுகத்தில் ஜப்பானிய போர்க்கப்பல்



(திருமலை)

ஜப்பானிய கடற்படையின் Harusame என்ற போர்க்கப்பல் நல்லெண்ணப் பயணமாக நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

151 மீற்றர் நீளமும் 4550 தொன் எடையும் கொண்ட இந்தப் போர்க்கப்பல் 165 மாலுமிகளுடன் இலங்கை வந்தது.

மூன்று நாட்கள் இந்தப் போர்க்கப்பல் திருகோணமலையில் தரித்து நிற்கும்.

ஜப்பானிய போர்க்கப்பலின் கட்டளை அதிகாரி ஓஷிமா ரெரிஹிசா, இலங்கைக் கடற்படையின் கிழக்கு பிராந்திய கட்டளை அதிகாரி கொமடோர் சஞ்ஜீவ டயசுடன் பேச்சுக்களை நடத்தினார்.

இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தல் குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக இலங்கைக் கடற்படை தெரிவித்தது. (இ-7)

## திலகார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சோமராகம் இசை மன்றம் நடத்தும் கலாபூஷணம் எல்.திலகநாயகம் போலின் 10 ஆம் ஆண்டு ஞாபகார்த்த "திலகார்ப்பணம்" நிகழ்வு நாளை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் கலாபூஷணம் திருமதி நேசபூபதி அனுஸ்வ நாகராஜன், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அம்மாவா? அப்பாவா?

ஒரு சின்னப் பையன் வந்தான். அவனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டேன். ஏம்பா உங்கள் வீட்டிலே அம்மா புத்திசாலியா...? அப்பா புத்திசாலியா? என்றேன். அவன் அலட்சியமாக என்னைப் பார்த்துச் சிரித்தான்.

என்ன சேர் இது... இந்தக் காலத்திலே இது கூடவா தெரியாமல் இருக்கிறீர்கள் என்றான். ஒரு சின்னப் பையன் என்னைப் பார்த்து இப்படி கேட்டுவிட்டானே என்று நினைக்கிறபோது எனக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது!

அதன் பின்பு தான் எங்க தாத்தா சொன்ன ஒரு கதை எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அது என்ன தெரியுமா? ஒரு ஊரிலே ஒரு அம்மாவும் பிள்ளையும் இருந்தார்கள். அந்த மகனுக்குத் திடீரென்று தேசாந்திரம் போய் வர வேண்டும் என்று ஆசை வந்து விட்டது. ஊர் ஊராய்ச் சென்று சுத்திப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை.

அந்த அம்மாவுக்கு இது பிடிக்கவில்லை. மகனைப் பிரிந்து இருப்பதற்கு அவர் மனது இடம் கொடுக்கவில்லை. வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தார். அவன் கேட்கவில்லை. போய்த் தீருவேன் என்று ஒற்றைக் காலிலே நின்றான். திடீரென்று புறப்படவும் செய்தான். சரி இவனைத் தடுக்க முடியாது என்று முடிவு செய்தார் அந்த அம்மா. இருந்தாலும் புத்திசாலித்தனமான ஒரு யோசனை செய்தார்.

மகனைக் கூப்பிட்டார். அவனிடம் சொன்னார்...இதோ பாரப்பா நீ தேசாந்திரம் போறதென்று தீர்மானம் செய்து விட்டாய். அதை நான் தடுக்கவில்லை. சென்று வா... ஆனால் போறதுக்கு முன்னர் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போ என்றார்.

போகிறபோது இரவா இருந்தாலும் சரி பகலா இருந்தாலும் சரி புளிய மரத்து நிழலிலே தங்க வேண்டும். திரும்பி வருகிற போது இரவும் பகலும் நீ வேப்ப மரத்து நிழலிலே தங்க வேண்டும் என்றார்.

சரி அப்படியே செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்து விட்டுப் புறப்பட்டுப் போனான் பையன்.

போகிற வழியிலே புளிய மரத்து நிழலிலே தங்கினான். அப்படி போய்க்கொண்டேயிருந்தான். ஏழாவது நாள் அவன் உடம்புக்கு சுகமில்லாமல் போய்விட்டது. ரொம்பவும் பலயீனமாக ஆகி விட்டான். இனிமேல் நடக்க முடியாது என்கிற நிலைமை,

யோசித்துப் பார்த்தான். சரி இதுக்கு மேல் போக வேண்டாம் என்று முடிவு செய்து கொண்டு திரும்பி வர ஆரம்பித்து விட்டான். திரும்பி வருகிற போது வழியிலே வேப்பமரத்து நிழலிலேயே தங்கித் தங்கி வந்தான்.

நாளுக்கு நாள் உடம்பு சரியாகி விட்டது. ஏழாம் நாள் வீட்டுக்கு வந்து சேர்கிற போது உடம்பு பழைய படியே கலகலப்பாக ஆகி விட்டது. பூரண சுகம் அடைந்து விட்டான்.

தேசாந்திரம் போன பையன் திரும்பி வந்து விட்டானே என்று அந்த அம்மா ஆச்சரியப்படவில்லை. ஏன் என்றால் அவருக்குத் தெரியும் இப்படி ஆகும் என்று. பையன் சீக்கிரமாக திரும்பி வரவேண்டும் என்பதற்காகத்தான் அவர் அந்த யோசனையை செய்தார். என்ன விடயம் என்கிறதையும் அவரே சொன்னார்.

மகனே புளிய மரத்து நிழல் உடம்புக்கு உஷ்ணத்தைக் கொடுக்கும். சீக்கை உண்டாக்கும். அதனாலே நீ தொடர்ந்து புளியமரத்து நிழலிலே தங்கியதாலே நீ நோய்க்கு ஆளாகிவிட்டாய். அதனாலே பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டாய். திரும்பி வருகிற போது நீ தங்கினது வேப்ப மர நிழல். அது உடம்புக்குக் குளிர்ச்சியைத் தரக் கூடியது. நோயைத் தீர்க்கக் கூடியது. அதனாலே சுகமாக வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டாய். உன்னுடைய தேசாந்திரப் பயணத்தைத் தடுக்கிறதுக்குத்தான் இப்படிச் செய்தேன் என்றார் அந்த அம்மா.

பார்த்தீர்களா அம்மாவினுடைய புத்திசாலித்தனத்தை. அப்பாவா இருந்தால் அப்படியா செய்வார். ஒரு அப்பா பையனிடம் 10 ரூபா கொடுத்து இதை எடுத்துக் கொண்டு அடுத்த ஊருக்குச் சென்று அங்கே இருக்கிற மாமாவிடம் இதைக் கொடுத்து விட்டு வா. வழியிலே எங்கேயாவது மரத்தடியில் படுத்துத் தூங்கி விடாதே என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார்.

பையனுக்கு எச்சரிக்கையாக வாழுறது எப்படி என்கிறதை கற்றுக் கொடுக்கிறதுக்காக இப்படிச் செய்தார்.

அவன் பணத்தை வாங்கிக்கொண்டு போனான். அப்பா சொன்னதை மறந்து ஒரு மரத்தடியிலே படுத்துத் தூங்கினான்.

அவனுக்குத் தெரியாமல் அவன் பின்னாலேயே சென்ற அப்பா அவன் கையிலே இருந்த அந்த 10 ரூபாவை தந்திரமாக எடுத்துக் கொண்டு திரும்பி வந்துவிட்டார்.

பையன் முழித்துக் கொண்டதும் பையைத் தடவிப் பார்த்தான். பணத்தைக் காணவில்லை. அழுது கொண்டே திரும்பி வந்தான். அப்பாவிடம் விடயத்தைச் சொன்னான்.

அப்பா சிரித்துக் கொண்டே சொன்னார் அதுக்குத்தானப்பா ஆரம்பத்திலே எச்சரிக்கை செய்தேன். இனிமேலாவது நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி செய்தேன். அந்தப் பணம் எங்கேயும் போகவில்லை.

நான் தான் அதை உனக்குத் தெரியாமல் எடுத்து வைத்திருக்கிறேன். இதோ இருக்குப் பாரு அது என்று சொல்லிக் கொண்டு பொக்கட்டிலே கையைவிட்டார். அது ஓட்டையாக இருக்கிறது. அதை எவனோ எடுத்துக் கொண்டு சென்றிருக்கிறான்.

# சுவிஸ் தூதரக சம்பவம் திட்டமிட்ட நாடகமாகும்

## அமைச்சர் அமரவீர உறுதி

(கொழும்பு)

சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் முற்று முழுதாக திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட நாடகமெனவும் இது நாடகம் என்பதற்கான ஆதாரங்கள் அரசாங்கத்திற்கு கிடைத்ததாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

எனினும் சுவிஸ் தூதரகம் ஏன் இதனைச் செய்தது. இந்த நாடகத்தின் பின்னணியிலுள்ள சூழ்ச்சிக்காரர்கள் யார் என்பதை கண்டறிய வேண்டியுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆளும் கட்சி குழுக் கூட்டம் நேற்று முன் தினம் இரவு அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுவிஸ் தூதரகக் பெண் பணியாளர் கடத்தப்பட்ட விவகாரம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் பல உண்மைகள் கண்டறியப் பட்டன.



குறிப்பாக இந்தச் சம்பவம் முற்று முழுதாக திட்டமிடப்பட்டு நகர்த்தப்பட்ட நாடகமாகும். இது ஒரு நாடகம் என்பதற்கான சாட்சியங்களுடன் எமக்கு தகவல்கள் கிடைத்தன.

இந்தச் சூழ்ச்சியின் பின்னணியில் யார் இருப்பது என்பதை மட்டுமே இப்போது நாம் கண்டறிய வேண்டியுள்ளது.

இந்தச் சம்பவம் முற்று முழுதாக நாடகம் என்பது எமக்கு நன்றாகவே தெரிந்த ஒன்றாகும். ஆகவே அரசாங்கமாக நாம் இந்தச் சம்பவம் குறித்து கவனமாக அவதானித்து வருகின்றோம்.

எனினும் சுவிஸ் தூதரகம் இதனைச் செய்யக் காரணம் என்ன? இதன் பின்னணியில் யார் செயற்பட்டது. அவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த செய்யப்பட்ட ஒரு விடயமே இது. அதற்கான சாட்சிகள் உள்ளன.

அதேபோன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இப்போதும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்களுக்கு இடமளித்து நாம் தலையிடாது பார்த்துக் கொண்டுள்ளோம். விரைவில் உண்மைகள் வெளிவரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நேர்மைத் திறன் விருது பெற்ற பணிப்பாளருக்குப் பாராட்டு





(குப்பிழான்)

இலங்கையில் ஊழலற்ற அதிகாரிகளில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு நேர்மைத் திறன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி நேற்று கந்தரோடை சுகாதார சமூக நலன்புரி நிலையத்தில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் கந்தரோடை சுகாதார சமூக நலன்புரி நிலைய வெளிநோயாளர் பிரிவின் பொறுப்பு வைத்தியர் வைத்திய கலாநிதி பா.சுதந்திரமதன், நிலையத்தின் முகாமையாளர் ரி.சிறீதரன், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-18)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படல மூலமும் உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவர் இயற்றிய உரையும் (மீள் பதிப்பு) நூல் வெளியீடு நாளை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் ஞான பண்டித ஆன்மீக வித்தகர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும். (இ-5)

# கோண்டாவிலில் வயோதிபப் பெண் சித்திரவதையின் பின் கொலை!

## சந்தேகநபர்கள் இருவரின் குருதி மாதிரிகள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண், சித்திரவதையின் பின் கொடூரமாக கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் இருவரது குருதி மாதிரிகளும் எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றின் உத்தரவில் சந்தேகநபர்கள் இருவரையும் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் கோப்பாய் பொலிஸார் நேற்று (டிச.11) புதன்கிழமை முற்படுத்தினர். இதன்போது சந்தேக நபர்களின் குருதி மாதிரிகள் பெறப்பட்டன.

இருபாலையில் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலிலுள்ள சந்தேகநபர்கள் இருவரும் மீதே கோண்டாவிலில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண் கொலைக் குற்றச்சாட்டையும் கோப்பாய் பொலிஸார் முன்வைத்தனர்.

அது தொடர்பில் வயோதிபப் பெண் கொலை செய்யப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட குருதி மாதிரிகளுடன் சந்தேகநபர்களின் குருதி மாதிரியையும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் கடந்த மாதம் 25 ஆம் திகதி விண்ணப்பம் செய்திருந்தனர்.

எனினும் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திய வழக்கில் சந்தேகநபர்கள் இருவரும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர்தான் அவர்களை சட்ட வைத்திய அதிகாரியின் முன் முற்படுத்த முடியும் என்பதால் இரண்டு வாரங்கள் இந்தப் பணி தள்ளிப்போடப்பட்டது.

இந்நிலையில் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று முன்தினம் நீதிமன்றில் வைத்து பாதிக்கப்பட்ட சிறுமி உட்பட்ட சாட்சிகள் இருவரும் அடையாளம் காட்டினர்.

அதனால் வயோதிபப் பெண்ணின் கொலைக் குற்றச்சாட்டு வழக்கில் சந்தேக நபர்கள் இருவரும் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டு அவர்களின் குருதி மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். கடந்த ஒக்டோபர் 21 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

2 பிள்ளைகளின் தாயான சந்திராதேவி (வயது-61) என்ற வயோதிபப் பெண்ணே வெட்டுக் காயங்களுடன் வீட்டு முற்றத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

பிள்ளைகளில் ஒருவர் வெளிநாட்டில் உள்ளதுடன் மற்றையவர் ஆசிரியர் என்றும் நீர்வேலியில் வசித்து வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வயோதிபப் பெண் சடலமாக மீட்கப்பட்ட இடத்தில் இருந்து கூரிய ஆயுதத்தையும் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் மீட்டனர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கொடூர குணமுடையவர்களே இந்தக் கொலை செய்தனர் என்றும் வயோதிபப் பெண்ணை இழுத்து வந்து வயிற்றுப் பகுதியில் நெருப்புத் தணல் உடைய கடையால் சூடு வைத்து பெரும் சித்திரவதை செய்தனர் என்று நீதி விசாரணைகளில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. வயோதிபப் பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் காப்புகள் என்பனவும் கொள்ளையிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சமுதாயப் பிளவுகள், பிரிவினை அதிகரிப்பு

## சமூக ஒருமைப்பாட்டை வலுப்படுத்துமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் அண்மைக்காலமாக சமுதாயப்பிளவுகள் அதிகரித்து பிரிவினை உருவாகிவரும் போக்கு காணப்படுகின்றது. அத்தகைய சவாலுக்கு இலங்கையும் முகம்கொடுத்துள்ளது.

எனவே இந்தச் சவாலை எதிர்கொண்டு சமூகங்களின் மத்தியில் ஒருமைப்பாட்டை வலுப்படுத்த வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் கலாநிதி தீபிகா உடகம வலியுறுத்தினார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு "வார்த்தைகள், மனதைக் காயப்படுத்தும் வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பான இளைஞர்களின் பிரதிபலிப்புக்கள்" என்ற தொனிப்பொருளில் நிகழ்வொன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சர்வதேச தொடர்புகள் மற்றும் இராஜதந்திரக் கற்கைகளுக்கான லக்ஷ்மன் கதிர்காமர் கற்கை நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அறிமுக உரையாற்றிய போதே ஆணைக்குழுவின் தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு சமூகங்களின் மத்தியிலும் பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்டாலும் கூட அவை பிரச்சினைக்குரியவை அல்ல. மாறாக ஒவ்வொரு பிரிவினரும் தனித்துவத்தைக் கொண்டாடுவதற்குரிய அடிப்படையை அவையே வழங்குகின்றன.

நாடொன்றின் ஆட்சி நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால், அங்கு மக்கள் அனைவருக்கும் பிரிக்கப்படாத அல்லது வேறுபடுத்தப்படாத பொதுவான உரிமைகள் வழங்கப்பட்டு, அவை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

மக்களுக்கான பொருளாதார மற்றும் சமூக வசதிவாய்ப்புக்களை விடவும் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்றமைக்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும் என்று உலகின் சில நாடுகள் கூறுகின்றன. மேலும் சில நாடுகள் அதற்கு எதிரான கொள்கையைக் கொண்டவையாக இருக்கின்றன.

தற்போது உலகளவில் நிறவெறிக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படுதல், பெரும்பாலான நாடுகளில் பெண்கள் உள்ளிட்ட நாட்டு மக்கள் அனைவருக்குமான சர்வஜன வாக்குரிமை வென்றெடுக்கப்பட்டிருத்தல் போன்றவை அடையப்பட்டிருந்தாலும் கூட, அதனால் மாத்திரம் நாம் திருப்தியடைந்துவிட முடியாது. ஏனெனில் மனித உரிமைகள் சார்ந்து இன்னமும் அடையப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன.

உலகளாவிய ரீதியில் அண்மைக்காலமாக சமுதாயப்பிளவுகள் அதிகரித்து பிரிவினை உருவாகிவரும் போக்கு காணப்படுகின்றது.

அத்தகைய சவாலுக்கு இலங்கையும் முகம்கொடுத்துள்ளது. எனவே இந்தச் சவாலை எதிர்கொண்டு சமூகங்களின் மத்தியில் ஒருமைப்பாட்டை வலுப்படுத்த வேண்டிய கடப்பாடு எம் மனைவருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

பிரிவினைகளின் ஓரங்கமாக தற்போது அதிகரித்துவரும் வெறுப்புணர்வுப் பேச்சுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பும் வல்லமையும் இளைய சமுதாயத்திடம் உண்டு. அவர்களுடைய துடிப்புடனான ஆற்றலின் ஊடாக அதனைச் சாதிக்க முடியும்.

ஆகையினாலேயே இம்முறை சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிறுத்திய எமது தொனிப்பொருளாக "வார்த்தைகள், மனதைக் காயப்படுத்தும் வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பான இளைஞர்களின் பிரதிபலிப்புக்கள்" என்பதை நிர்ணயித்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரதியாரின் 137ஆவது பிறந்ததின நிகழ்வு யாழில்







(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகமானது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 137 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்றுக் காலை நல்லூரில் அமைந்துள்ள மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் திருவுருவச் சிலை முன்றலில் மலர் மாலை அணிவித்து மதிப்பளிக்கும் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் உட்பட பல பிரமுகர்களும் தூதரக அலுவலர்களும் மாணவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

யாழ்.இந்தியத்துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன், வடமாகாண அவைத்தலைவர் உட்பட வருகை தந்திருந்த பிரமுகர்கள் பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து தமது வணக்கத்தினை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துடன் பாரதியாரின் சில பாடல்களையும் பாடினர். (இ-7)

# புதிய ஜனாதிபதிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)

நாட்டை முன்னோக்கிகொண்டு செல்வதற்காக பதவிக்கு வந்துள்ள புதிய ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.


கொழும்பு கெத்தாராம பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்து மூன்று வாரங்களே கடந்துள்ளன. அவர் மிகப் பெரிய வெற்றியை பெற்றுக் கொண்டார்.

நாட்டுக்கு புதிய தலைவர் கிடைத்ததும் அந்த புதிய தலைவருக்கும் புதிய அரசாங்கத்திற்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினை வறுமை. இதனால் நாட்டில் வறுமையை ஒழிக்கவும் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் புதிய அரசாங்கத்திற்கும் புதிய ஜனாதிபதிக்கும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மிக் விமானக் கொள்வனவு விவகாரம் உதயங்கவின் கோரிக்கை நிராகரிப்பு



(கொழும்பு)

சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்வதற்கான சிவப்பு அறிவித்தல், பிடியாணையை மீளப்பெறுமாறும் அவ்வாறு மீளப் பெறும் பட்சத்தில் இலங்கைக்கு வந்து மிக் விமானக் கொள்வனவு விவகார விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க தான் தயாராக இருப்பதாகவும் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க முன்வைத்த கோரிக்கையை கோட்டை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வாவின் நெறிப்படுத்தலில் சட்டத்தரணி ஜி.குணரத்ன இதற்கான கோரிக்கையை நேற்று முன்தினம் மன்றில் முன்வைத்தார்.

இதனையடுத்து, பிடியாணை பிறப்பிக்கப்படும் போது இருந்த நிலைமை எந்தவிதத்திலும் மாறவில்லை என சுட்டிக்காட்டிய நீதவான் ரங்க திஸாநாயக்க அப்பிடியாணையை மீளப்பெற முடியாது எனக் கூறி சட்டத்தரணியின் கோரிக்கையை நிராகரித்தார்.

2006 ஆம் ஆண்டு மிக்- 27 ரக விமான கொள்வனவின் போது இடம்பெற்ற சுமார் 14 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி மோசடி தொடர்பில் உதயங்க வீரதுங்க சந்தேக நபராக பெயரிடப்பட்டு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2016.10.20 ஆம் திகதி முன்னாள் கோட்டை நீதவானாக இருந்த லங்கா ஜயரத்ன குற்றவியல் சட்டத்தின் 63 (1) அ பிரிவின் கீழ் இந்த பிடியாணையை பிறப்பித்திருந்தார்.

அதன் பின்னர், ஏற்கனவே உதயங்கவின் சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா, கடந்த 2017.08.11 ஆம் திகதியும் பிடியாணையை மீளப் பெறுமாறு கோரிய போதும் அதனை நீதவான் லங்கா ஜயரத்ன நிராகரித்திருந்தார். அந்த நிராகரிப்பு உத்தரவை 2017.08.21 ஆம் திகதி அவர் பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில் அப்போதிருந்த நிலைமையும் தற்போது உள்ள நிலைமையும் வேறு வேறு எனக் கூறி சட்டத்தரணி ஜி.குணரத்ன பிடியாணையை இரத்துச் செய்யக் கோரிய போது, நிலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்ன என நீதவான் ரங்க திஸாநாயக்க அவரிடம் கேள்வி எழுப்பினார்.

குறித்த வழக்கு அரசியல் பழிவாங்கல் நோக்கில் தொடுக்கப்பட்டது என சட்டத்தரணி குணரத்ன கூறியபோது, 2016.10.20 ஆம் திகதி நீதவான் லங்கா ஜயரத்ன பிடியாணை வழங்கும்போது இருந்த நிலைமையில் எந்த மாற்றமும் இல்லை என சுட்டிக்காட்டிய கோட்டை நீதவான் ரங்க திஸாநாயக்க பிடியாணையை மீளப்பெற முடியாது என அறிவித்தார்.


2006 ஆம் ஆண்டு உக்ரேய்னிடமிருந்து இலங்கை மிக்-27 ரக போர்விமானங்கள் நான்கினை கொள்வனவு செய்திருந்தது.

இந்நடவடிக்கையானது முன்னாள் ரஷ்யத் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் இது குறித்த ஒப்பந்தங்களும் விமானப்படையிடமிருந்து காணாமல் போயுள்ள நிலையில் இக்கொள்வனவு தொடர்பில் 14 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மோசடி இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# இலங்கையிலுள்ள இந்துக்களுக்கு சாதகமாக எதுவும் இல்லை

## இந்திய குடியுரிமை சட்ட மசோதாவுக்கு சிவசேனா எதிர்ப்பு



(டில்லி)

குடியுரிமை சட்ட திருத்தத்திற்கு எதிராக மாநிலங்களவையில் வாக்களிக்கவுள்ளதாக சிவசேனா தெரிவித்தது.

தங்களது சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்கள் கிடைக்கவில்லை என்றால் இவ்வாறு குறித்த திருத்த மசோதாவிற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக மாநிலங்களவை உறுப்பினரும் அக் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான சஞ்சய் ராவுத் தெரிவித்தார்.

குடியுரிமை சட்ட திருத்த மசோதாவுக்கு ஆதரவாக மக்களவையில் சிவசேனா வாக்களித்தது.

மகாராஷ்டிராவில் சிவசேனாவுடன் கூட்டணியில் உள்ள காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் எதிர்த்து வாக்களித்த நிலையில், சிவசேனா ஆதரித்தது.

இதனையடுத்து, திடீரென தங்களுக்கு மசோதாவில் சில சந்தேகங்கள் இருப்பதாகவும், அதனை நிவர்த்தி செய்தால் மட்டுமே மசோதாவுக்கு மாநிலங்களவையில் ஆதரவு அளிக்கப்படும் எனவும் சிவசேனா தெரிவித்தது.

அத்துடன், இந்த மசோதாவில் இலங்கையிலுள்ள தமிழ் இந்துக்களுக்கு சாதகமாக எதுவும் இல்லை எனஅக் கட்சி சுட்டிக்காட்டியது. (இ-7)

## வைத்தியரின் தவறால்

# 14 வயது சிறுமி உயிரிழந்த விவகாரம்

## விசாரணைகள் ஆரம்பம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்று நோய் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 14 வயது மாணவியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெற்றுவருவதாக போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி கலாறஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காங்கேயனோடை பிரதேசத்தைச் சேர்ந்த உவைஸ் பாத்திமா ஜப்றா (வயது-14) எனும் மாணவி கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த குறித்த சிறுமியின் பெற்றோர், "காங்கேயனோடை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற குறித்த மாணவியை கடந்த வருடம் திடீரென புற்று நோயால் பாதிக்கப்பட்டதையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக் கொண்டு சென்று புற்று நோய் சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தோம்.

சிகிச்சை பலனளித்து உடல் நிலை தேறி வந்த நிலையில் மாதாந்தம் மருத்துவ சோதனைக்குச் சென்று வந்த நிலையில் கடந்த வாரம் ஜப்றாவுக்கு மருந்து வழங்கப்பட்டது.

2 மில்லி மருந்தே தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தபோதும் அன்றைய தினம் வைத்தியர் 20 மில்லி மருந்தை வழங்குமாறு வைத்திய அறிக்கையில் எழுதியுள்ளார். ஆனால் 2 மில்லி மருந்து வழங்குவதற்கு பதிலாக 20 மில்லி மருந்தை வழங்கி விட்டார்கள்.

பின்னர் மயக்கமடைந்த மகளை அன்றைய தினம் இரவோடு இரவாக கண்டி வைத்திய சாலைக்கு கொண்டு சென்று அங்கும் சிகிச்சை பலனளிக்காததால் மீண்டும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கடந்த சனிக்கிழமை கொண்டுவந்து அங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கட்கிழமை மாலை உயிரிழந்தார்.

வைத்தியர் விட்ட பிழையாலேயே எங்களது மகளுக்கு இந்த நிலை ஏற்பட்டது. இன்று நாங்கள் ஒரு பிள்ளையை இழந்து நிற்கின்றோம். எங்கள் பிள்ளைக்கு நடந்த இவ்வாறான சம்பவம் இன்னுமொரு பிள்ளைக்கு நடக்கக் கூடாது. அத்தோடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவும் நடவடிக்கை எடுத்ததாக" தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் பணிப்பாளரிடம் கேட்ட போது, "இந்த சிறுமி எமது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 3 ஆம் திகதி புற்று நோய்க்கு மருந்து ஏற்றப்பட்ட போது இடம்பெற்ற தவறு காரணமாக பக்கவிளைவுகள் ஏற்பட்டு அதற்குரிய சிகிச்சை பலனின்றி கடந்த 9 ஆம் திகதி மாலை உயிரிழந்தார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு அறிவித்ததுடன் நிகழ்ந்த தவறு தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணை இடம்பெற்று வருகின்றது. அதேவேளை தவறுகள் இடம்பெறும் பட்சத்தில் உரிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இருந்தபோதும் எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான தவறுகள் இடம்பெறும் பட்சத்தில் எனக்குத் தெரியப்படுத்தினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

குறித்த மாணவியின் பிரதேசமான காங்கேயேனோடை பிரதேசத்தில் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுவதுடன் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு பதாகைகளும் கட்டப்பட்டதுடன் பள்ளி வாசல்களில் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இதேவேளை கடந்த மார்ச் மாதத்தில் சிறுவன் ஒருவருக்கும் இரத்தம் மாற்றி ஏற்றப்பட்டு உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றதுடன் பாதிக்கப்பட்ட பெற்றோர் நீதிமன்றத்தை நாடிய நிலையில் வழக்கு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "மனித உயிர்களைக் கொலை செய்ய யாருக்கும் இடமளிக்க முடியாது"



(கொழும்பு)

மனித உயிர்களைக் கொலை செய்யவோ அடக்கியாளவோ எந்தவொரு தரப்பினருக்கும் இடமளிக்கக்கூடாது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இராணுவத்தினர் என்ற வகையில், மக்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டியது பிரதான கடப்பாடாக இருக்கிறது.


சில சமயங்களில் தீயவர்களிடம் இருந்து மக்களை பாதுகாக்க உயிர்த்தியாகங்களையும் செய்ய வேண்டிய நிலைமை இராணுவத்தினருக்கு ஏற்படும்.

இதற்காக நாம் அனைத்து பாதுகாப்புத் தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் வாழும் உரிமையை உறுதிப்படுத்த இராணுவம் உள்ளிட்ட முப்படையினருக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்தே ஆகவேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களுக்கு நாம் இந்த வருட ஆரம்பத்தில் முகம் கொடுத்தோம். இதனால் நூற்றுக்கணக்கான அப்பாவி உயிர்கள் கொல்லப்பட்டன. பொறுப்பில் உள்ள நபர்களின் அலட்சியப் போக்கினாலேயே இந்த விளைவு ஏற்பட்டது.

நாம் மக்களின் உயிரைப் பாதுகாக்கவே இங்கு வந்துள்ளோம். அந்தவகையில், எந்தவொரு உயிரையும் பறிக்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தல்; இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)

சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் சுவிஸ் தூதுவரை பலமுறை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் கானியா பென்னிஸ்டர் பிரான்சிஸ் என்ற அதிகாரி நேற்று முன்தினமும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் மூன்றாவது முறையாக முன்னிலையாகி ஐந்து மணித்தியாலங்கள் வரை வாக்குமூலம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் குறித்த அதிகாரி தெரிவித்துள்ள விடயங்களுக்கும், சுவிஸ் தூதுவர் வழங்கியுள்ள சாட்சியத்திற்கும் இடையில் பரஸ்பர முரண்பாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் தூதுவராலயத்தின் முதல் முறைப்பாட்டுக்கு அமைய கொழும்பு 7 இல் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் வைத்து அவர் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலும், கடத்தப்பட்ட அதிகாரி தான் பம்பலப்பிட்டிய பகுதியில் வைத்து கடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

அதேபோல் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும் அன்றைய தினம் அவர் சிவப்பு நிற வானில் பயணித்து மாளிகாகந்த பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு சென்றதாக தெரிவித்துள்ளார். (ஜ-2)



சுகாதார மேம்பாட்டு முன்பள்ளியாக உருவான கெற்பேலி சிவசக்தி முன்பள்ளி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமுதாய மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ்.சிவகணேசன் கலந்து கொண்டார். குப்பைகள் தரம் பிரித்து போடல், கை கழுவும் வசதி, பற்தூரிகையைக் கொண்டு பல் சுகாதாரத் தகவல்கள் அடங்கிய ஓவியங்களை சுவரில் வரைதல் ஆகியவற்றை பயின்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# சிறைச்சாலை நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை - நிமால்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலைக் குள்வாங்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கையில் மூன்று மடங்கு அதிகமாக தற்போது சிறைப் படுத்தப்பட்டிருக்கின்றனர்.

கடந்த அரசாங்கத்தால் நீதி மன்றங்களை அமைக்க நிதி ஒத்துக்கியளவில் சிறைச்சாலை நடவடிக்கைகளுக்கு போதுமான நிதி ஒதுக்கி இருக்கவில்லை என நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெறும் நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிக்க நேற்று முன்தினம் அங்கு சென்றிருந்த அவர், சிறைக்கைதிகளின் தங்குமிட வசதிகள் அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்ததுடன் அங்கு சேவையில் இருக்கும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவைகளைக் கேட்டறிந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் பாரிய குறைபாடுகள் இருப்பதை அதிகாரிகளுடன் கலந்துரையாடும்போது அறிந்து கொள்ள முடிந்தது. அதனால் வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேரில்வந்து அதனை பார்க்க வேண்டும் என்று நினைத்து இங்குவந்து கைதிகளின் தங்குமிட வசதிகள் மற்றும் அவர்களின் நலனோம்பு விடயங்கள் தொடர்பாக கேட்டறிந்தேன். அதிகாரிகள் தெரிவித்ததைப் போன்று பல குறைபாடுகள் இருக்கின்றன. கைதிகளின் தங்குமிட வசதிகள் போதுமானதாக இல்லை.

குறிப்பாக வெலிக்கடை சிறைச்சாலையில் உள்வாங்க முடியுமான கைதிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க மூன்றுமடங்கு கைதிகள் இங்கு சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். அதனால் கட்டடங்கள் உடனடியாக தேவைப்படுகின்றன.

முதற்கட்டமாக கைதிகளின் தங்குமிட வசதிகளை மேற்கொள்ள 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கி இருக்கின்றோம். அதேபோன்று சிறைச்சாலைக்குள் நீண்டகால மற்றும் குறுகிய கால வேலைத்திட்டம் எனப் பிரித்து இன்னும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம்.

அத்துடன் கடந்த அரசாங்கம் புதிய நீதிமன்றங்களை ஆரம்பிப்பதற்கு பாரியளவில் நிதி ஒதுக்கி இருந்தது. ஆனால் சிறைச்சாலை நடவடிக்கைகள் கைதிகளின் வசதிகளை அதிகரிப்பதற்கு போதுமான நிதி ஒதுக்கி இருக்கவில்லை. அதனால் சிறைச்சாலைகளுக்குள் மாற்றம் ஒன்று தெரியும்வகையில் எதிர்வரும் மூன்று மாதத்துக்குள் நிறைவு செய்யும் பல வேலைத்திட்டங்களை உடனடியாக மேற்கொள்ள இருக்கின்றோம்.

குறிப்பாக சிறைச்சாலை பூராகவும் கண்காணிக்கும்வகையில் சீ.சீ.டி.வி.கமராக்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

அத்துடன் வெலிக்கடை சிறைச்சாலையை இந்த இடத்தில் இருந்து மாற்றி கொழும்புக்கு வெளியில் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். நகரப்பிரதேசத்தில் சிறைச்சாலை இருப்பது பொருத்தமில்லை. தற்போது ஹோமாக பிரதேசத்தில் இதற்கு தேவையான காணி பார்த்திருக்கின்றோம். விரைவில் அது தொடர்பான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

அதேபோன்று சில சிறைக் கைதிகள் நீண்டகாலமாக இங்கு தங்கி இருப்பதாகவும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகத்துடன் இணைந்து மீண்டும் வாழ்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறைக்கைதிகளுடன் கலந்துரையாடும்போது அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள்.

இதுதொடர்பாக நாங்கள் எதிர்காலத்தில் அவதானம் செலுத்த இருக்கின்றோம். நீண்ட காலம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பவர்களின் குற்றத்தின் தன்மை தொடர்பாக ஆராய்ந்து அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டிருந்தால் அவர்களை விடுவிக்கும் நடைமுறையொன்றை மேற்கொள்ளவேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சமாதானத்தின் வேர்கள் ஆழ ஊடுருவட்டும் யாழிலிருந்து கொழும்பிற்கு நடைபயணம்



(யாழ்ப்பாணம்)

சமாதானத்தின் வேர்கள் ஆழ ஊடுருவட்டும் எனும் தலைப்பில் நேற்று யாழ்ப்பாணம் மாதகல்லில் இருந்து கொழும்பிலுள்ள ஜனாதிபதி அலுவலகம் வரை நடைபயணம் ஒன்றை வி.சகாதேவன் ஆரம்பித்தார்.

நேற்றுக் காலை 8 மணியளவில் மாதகல் சங்கமித்தா விகாரையிருந்து அவர் நடைபயணத்தை ஆரம்பித்தார்.

ஒரு சமாதான செய்தியை சிங்கள மக்களுக்கும் நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் தெரிவிக்கும் வகையில் குறித்த நடைபயணத்தை ஆரம்பித்துள்ளதாக சகாதேவன் தெரிவித்துள்ளார். இந்த நடைபயணத்தில் சகாதேவனுடன் சில ஆதரவாளர்களும் இணைந்து ஆரம்பித்தனர்.(இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1914

### சுலக்ஷனா


பார்த்து பதம்மா வாய்யா...




உன்னை நினைச்சாலே நெஞ்சம் பதறுகிறது. இன்னும் என்னென்ன சமாளிக்க போறேன் என்று தெரியல்லையே.


### பிரதீபன்

மற்றவர்களுக்கு பாவம் பார்த்தே...



நம்மில் பலர் பாவமான நிலைக்கு தள்ளப்படுகிறோம்...


### கார்த்திகா



நேரம் வீணாகும் வரை உன் வாழ்க்கையும் வீணாகிக் கொண்டு தான் இருக்கும்.

### ராஜ்

நல்ல விடயத்திற்காக தனியாக நிற்க வேண்டிய சூழ்நிலை வந்தாலும்



தைரியமாக நில்!


### பூர்ணிமா



நீ என்ன செய்தாலும் என்னை பற்றி குறை சொல்ல நாலு பேர் காத்துக்கொண்டு இருப்பார்கள்...

### நளாஜினி

நடிப்பவர்கள் கோபப்படுவதில்லை...




கோபப்படுபவர்களுக்கு நடிக்கத்தெரிவதில்லை...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புத்தளத்தில் கடும் மழை காரணமாக 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு





(புத்தளம்)
புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால் 1471 குடும்பங்களைச் சேர்ந்த 5067 பேர் பாதிக்கப்பட்டனர்.

புத்தளம், முந்தல், கற்பிட்டி, வணாத்திவில்லு, நவகத்தேகம, சிலாபம், மகாகும்புக்கடவல, மகாவெவ மற்றும் பள்ளம ஆகிய ஒன்பது பிரதேச செயலாளர் பிரிவுகள் இவ்வாறு பாதிக்கப்பட்டதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.


இதில் கற்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் 870 குடும்பங்களைச் சேர்ந்த 2835 பேரும் முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் 268 குடும்பங்களைச் சேர்ந்த 988 பேரும் பாதிக்கப்பட்டனர்.

புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் 91 குடும்பங்களைச் சேர்ந்த 274 பேரும் நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 152 பேரும் வணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவில் 81 குடும்பங்களைச் சேர்ந்த 292 பேரும் பாதிப்புக்குள்ளாகினர்.

மகாகும்புக்கடவல பிரதேச செயலகப் பிரிவில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேரும் மகாவெவ பிரதேச செயலாளர் பிரிவில் 90 குடும்பங்களைச் சேர்ந்த 459 பேரும் பாதிக்கப்பட்ட அதே வேளை, பள்ளம பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும் சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும் பாதிக்கப்பட்டனர்.

அத்துடன் மாவட்டத்தில் 23 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கனடாவில் அறிமுகமானது உலகின் முதல் மின்சார விமானம்





(ஒட்டாவா)
முழுவதும் மின்சாரத்தால் இயங்கக்கூடிய நீரிலும் வானிலும் பயணிக்கக்கூடிய கடல் விமானம் (electric-powered seaplane) கனடாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வான்கூவரைச் சேர்ந்த ஹார்பர் எயார் சீபிளேன்ஸ் (Harbour Air Seaplanes) நிறுவனமும் அமெரிக்க மின்சார என்ஜின் தயாரிப்பு நிறுவனமான மக்னி எக்ஸ்ம் (magniX) கூட்டாக இந்த விமானத்தை உருவாக்கியுள்ளன. 6 பேர் பயணிக்கக் கூடிய இந்த விமானம், ரிச்மாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதையடுத்து குறித்த் விமானம் கடல் பகுதியில் தனது முதல் ஒத்திகை பயணத்தை ஆரம்பித்தது. (ஜ-2)

# எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த முடிவு



(கொழும்பு)
அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்தது.

அந்த முன்னணியின் கல்வி பிரிவுச் செயலாளர் புபுது ஜெகொட கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையோர் சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம்

(கல்முனை)
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையோர் எனச் சந்தேகத்தின் பேரில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டோர் சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான 13 பேரையும் மீண்டும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது. குறித்த வழக்கு கல்முனை நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு இரு வேறு சந்தர்ப்பங்களில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு விசாரணைக்காக வந்த சந்தேக நபர்கள் அனைவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் பாதுகாப்புத் தரப்பினர்களால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கைதாகி பல மாதங்களுக்கு மேலான விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். மேலும் பொலிஸாரின் ஆட்சேபனையுடன் அனைத்து சந்தேக நபர்களதும் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு அடுத்த வழக்கு தவணையை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு கைதான சந்தேக நபர்கள் அனைவரும் காத்தான்குடி, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இதில் கல்முனை சாய்ந்தமருதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய சந்தேக நபர்களும் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-281)

# வைத்தியர் ஷாபி விவகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியில்லை

## குருநாகல் வைத்தியசாலை இயக்குநர் குற்றச்சாட்டு

(குருநாகல்)
வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீனால் கருத்தடை செய்யப்பட்ட தாய்மார்களுக்கு நீதி கிடைக்கவில்லை என குருநாகல் வைத்தியசாலையின் இயக்குநர் வைத்தியர் சரத் வீரபண்டார சுட்டிக் காட்டியுள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது தொடர்ந்தும் பேசிய அவர்,

வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீனால் கருத்தடை செய்யப்பட்ட தாய்மார்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இந்நிலையில் அத்தாய்மார்கள் சார்பில் நானும் சக ஊழியர்களும் நாட்டிற்கு வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றோம்.

கடந்த அரசாங்கத்தில் பல்வேறு அடக்குமுறை இருந்தன. வைத்தியர் ஷாபியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அவரை விடுதலை செய்வதற்காகவே விசாரணைகளே நடத்தப்பட்டன.


தங்களுக்கு என்ன பாதிப்புக்கள் ஏற்பட்டன என்பது தொடர்பில் அந்தத் தாய்மார்களுக்கு தெரியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 120 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 180 | 300 |
| தக்காளி | 180 | 140 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 |
| கோவா | 140 | 100 | 110 | 120 |
| கரட் | 250 | 240 | 220 | 300 |
| பூசணி | 60 | 40 | 50 | 80 |
| புடோல் | 140 | 80 | 90 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 420 | 480 |
| பெரிய வெங்காயம் | 200 | 130 | 140 | 160 |
| பாகற்காய் | 300 | 140 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 180 | 190 | 200 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 350 |
| பீற்றூட் | 260 | 180 | 80 | 200 |
| கறிமிளகாய் | 300 | 180 | 220 | 240 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 200 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | — | 150 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 200 | 210 | 250 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | — | 40 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | — | 150 | 120 |




# அரவிந்தனின் அனுபவம்



அரவிந்தன் அலுவலகத்துக்குள் நுழைந்ததும் ஒரு பியூன் அவனை நந்தி போல் இடைமறித்தான்.

"என்ன வேணும்?"

"டைரக்டரைப் பார்க்கணும்"

"அதெல்லாம் பார்க்க முடியாது."

இதற்கு என்ன பதில் சொல்வதென்று அரவிந்தனுக்குத் தெரியவில்லை. ஒரு நிமிடம் பேசாமல் நின்றான்.

"எஸ் ஓவைப் போய்ப் பாரு" என்றான் பியூன் "போனால் போகிறது" என்பது போல்.

"தாங்க்ஸ்" என்று சொல்லிவிட்டு அரவிந்தன் உள்ளே போனான்.

செக்ஷன் அலுவலர் என்ற செவ்வகப் பலகை வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய மேசைக்குப் பின்னால் ஒருவர் அதிகார தோரணையுடன் அமர்ந்திருந்தார். மேசைக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று பேர் நின்றுகொண்டிருந்தனர்.

பணிவுடனும் கவலையுடனும் நின்று கொண்டிருந்தவர்கள் அந்த அலுவலகத்துக்கு ஏதோ ஒரு நோக்கத்துக்காக வந்தவர்கள் என்றும், அலட்சியமாகக் கையில் ஒரு பேப்பருடன் நின்றிருந்தவர் அலுவலக ஊழியர் என்றும் அரவிந்தன் ஊகித்தான்.

இரண்டு மூன்று நிமிடங்கள் நின்ற பிறகும் செக்ஷன் அலுவலர் அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

அவன் "சேர்" என்றதும் அவனைப் பார்க்காமலேயே "கொஞ்சம் இரு" என்பது போல் கையால் சைகை காட்டி விட்டு, எதிரில் இருந்தவர்களிடம் கடுமையாகப் பேசிக்கொண்டிருந்தார். அருகில் நின்ற ஊழியர் அதை ரசிப்பது போல் புன்னகை செய்துகொண்டிருந்தார்.

இன்னும் இரண்டு நிமிடங்கள் ஆனதும் அரவிந்தன் மீண்டும் "சேர்!" என்றான்.

எஸ் ஓ இப்போது முகத்தை இன்னும் கடுமையாக்கிக்கொண்டு அவனிடம் திரும்பினார். "ஏம்ப்பா பேசிக்கிட்டிருக்கேனே தெரியல? நீயெல்லாம் படிச்சவன்தானே? அறிவு வேண்டாம்?" என்று எரிந்து விழுந்தார்.

அரவிந்தன் மௌனமாகத் தன் கையிலிருந்த கடிதத்தை அவர் முன் நீட்டினான்.

அவர் அதைப் பார்க்காமலேயே, பியூனிடம் "ஏம்ப்பா தண்டபாணி! இவரையெல்லாம் ஏன் எங்கிட்ட அனுப்புறாய்? எனக்கு ஆயிரம் வேலை இருக்கு" என்றார்.

"இல்லை சேர். டைரக்டரைப் பார்க்கணும்னாரு..."

"அப்ப டைரக்டர் கிட்ட அனுப்ப வேண்டியதுதானே! அவரோட தலைவலியையும் நான்தான் அனுபவிக்கணுமா?"

பியூன் அரவிந்தனிடம் சற்று உள்ளே தள்ளியிருந்த அறையைக் காட்டி "அந்த ரூம்தான் போ!" என்றான்.

ஐந்து நிமிடங்கள் கழித்து அரவிந்தன் டைரக்டரின் அறையிலிருந்து வெளியே வந்தபோது, அவனுடன் டைரக்டரும் வந்தார். செக்ஷன் அலுவலரின் அருகில் அவர்கள் வந்தபோது செக்ஷன் அலுவலர் எழுந்து நின்றார்.

"மிஸ்டர் சண்முகநாதன்! இவர் அரவிந்தன். நம்ப அலுவலகத்தில அசிஸ்டண்ட் டைரக்டரா ஜொயின் பண்ணி இருக்காரு. யூ பி எஸ் சி பரீட்சை எழுதி செலக்ட் ஆயிருக்காரு" என்றார்.

"சொறி சேர்! வெல்கம் சேர்!" என்றார் சண்முகநாதன்.

அரவிந்தன் சிரித்துக்கொண்டே அவருடன் கை குலுக்கினான். "வாங்க சேர். உங்க ரூமைக் காட்டுறேன்" என்றார் சண்முகநாதன்.

டைரக்டர் தன் அறைக்குச் செல்ல, சண்முகநாதன் அரவிந்தனை அவனுடைய அறைக்கு அழைத்துச் சென்றார்.

அரவிந்தன் சீட்டில் உட்கார்ந்ததும், சண்முகநாதன் "சொறி சேர். நீங்க என்னோட மேலதிகாரி. நீங்க யார்ன்னு தெரியாம உங்ககிட்ட தப்பாப் பேசிட்டேன்" என்றார். "முதல்ல உக்காருங்க" என்றான் அரவிந்தன்.

அவரிடம் சிறிது நேரம் அந்த அலுவலக நடைமுறைகளைப் பற்றிக் கேட்டறிந்தான்.

அவர் எழுந்து செல்லும்போது மீண்டும் ஒருமுறை மன்னிப்புக் கேட்டார்.

"சேர்! நீங்க என்னை விட வயசில பெரியவரு. அதிக அனுபவம் உள்ளவரு. நான் யார்ன்னு தெரியாமத்தான் பேசினீங்கன்னு என்னால புரிஞ்சுக்க முடியும். ஆனா நம்ம அலுவலகத்துக்கு வருகிறவர்கள் எல்லாரிடமும் நீங்க சுமுகமாகப் பேசினா இந்த மாதிரி எப்பவுமே நடக்காதே!"

சண்முகநாதன் எதுவும் சொல்லாமல் வெளியே போனார். "இந்தச் சின்னப்பய எனக்கு புத்தி சொல்ல வந்துட்டான்" என்று நினைத்துக்கொண்டாரோ அல்லது அவன் சொன்னதை பற்றிச் சிந்தித்துப் பார்ப்பாரோ தெரியாது!

அவர் வெளியே சென்றதும் பியூன் தண்டபாணி உள்ளே வந்தான்.

"வாங்க தண்டபாணி!" என்றான் அரவிந்தன்.

"சேர்! நீங்க யார்ன்னு தெரியாம..." என்று ஆரம்பித்தான்.

"விட்டுத் தள்ளுங்க" என்ற அரவிந்தன் "நம்ம ஸ்டாஃப் எல்லாரையும் ஒவ்வொருத்தரா வரச் சொல்லுங்க. அவங்களை நான் அறிமுகம் செஞ்சுக்கணும்" என்றான்.

"சரி சேர்!" என்று சொல்லிவிட்டு வெளியே போகத் திரும்பிய தண்டபாணி, திரும்பி வந்து "சேர்! இந்த அலுவலகத்தில என்னை வாங்க போங்கன்னு கூப்பிட்டவரு நீங்க ஒருத்தர்தான்" என்றான்.

"எல்லாரிடமும் - இந்த அலுவலகத்தில வேலை செய்யிறவங்க, இந்த அலுவலகத்துக்கு வருகிற எல்லாரிடமும் மரியாதையா, இனிமையா, பண்பா பேசிப் பாருங்க. எல்லாருமே உங்களுக்கு மரியாதை கொடுப்பாங்க" என்றான் அரவிந்தன்.

குறள் 97


நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று

பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பொருள்:

பிறருக்குப் பயன்படக்கூடிய விதத்தில் பண்போடு பேசப்படும் வார்த்தைகள் நன்மையை விளைவித்து நன்றி உணர்வை ஏற்படுத்தும்.

## தத்தி தத்தி ஓடுமாம்



தாவி தாவி குதிக்குமாம்
முத்துப்போன்ற வெண்முயல்
முட்டை கண்கள் சிமிட்டுமாம்
காது நீண்ட வெண்முயல்

கால்கள் இரண்டும் குட்டையாம்
சாது போன்ற வெண்முயல்
சத்தம் கேட்டால் ஓடுமே
சத்தம் கேட்டால் ஓடுமே

## விடுகதைகளும் விடைகளும்

• ஒரு குகை, 32 வீரர்கள், ஒரு நாகம் அது என்ன?

**வாய்**

• கையில்லாமல் நீந்துவான் கால் இல்லாமல் ஓடுவான். அவன் யார்?

**படகு**

• அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி. பாதிநாள் குறைவாள், பாதிநாள் வளர்வாள் அது என்ன?

**நிலா**

• பார்க்க அழகு பாம்புக்கு எதிரி அது என்ன?

**மயில்**

• அக்கா விதைத்த முத்து. அள்ள முடியாத முத்து. அது என்ன?

**கோலம்**

• ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?

**எறும்புக் கூட்டம்**

• எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல், அது என்ன?

**விக்கல்**

• அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?

**வெங்காயம்**

• பாலிலே புழு நெளியுது. அது என்ன?

**பாயாசம்**

• வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?

**ஆறு**

• மேலிலும் துவாரம், கீழிலும் துவாரம், வலதிலும் துவாரம், இடதிலும் துவாரம், உள்ளிலும் துவாரம் வெளியிலும் துவாரம் இருந்தும் நீரை என்னுள் சேமித்து வைப்பேன், நான் யார்?

**பஞ்சு**

• ஆழக் குழி தோண்டி அதிலே ஒரு முட்டையிட்டு அண்ணார்ந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?

**தென்னை**

## பொது அறிவுத் தகவல்கள்

• உலக சுற்றுச்சூழல் தினம் எப்போது கடைப்பிடிக்கப்படுகிறது?

**ஜூன் 5**

• மனித உடலில் வியர்க்காத பகுதி எது?

**உதடு**

• பஞ்ச தந்திர கதைகளை எழுதியவர் யார்?

**விஷ்ணு சர்மா**

• மனித தலையில் உள்ள மொத்த எலும்புகள் எத்தனை?

**22**

• ஈக்களின் சுவை உணர் உறுப்பு எது?

**நாக்கு**

• பாலில் உள்ளதை விட அதிக கல்சியம் உள்ள காய்கறி எது?

**வெங்காயம்**

கலங்காத உள்ளம் படைத்தவர்களே
இறுதி வெற்றிக்கு உரியவர்கள்!
- சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையை உருப்படாமல் செய்யும் பௌத்தமும் பேரினவாதமும்

இலங்கை வேந்தன் இராவணன் அழிந்த கதை அனைவருக்கும் நன்கு தெரிந்த கதை.

பொதுவில் முடி தரித்த மன்னர்களின் வரலாறு என்பது நாட்டைக் காப்பாற்றுவதற்காகப் போர் புரிந்ததாக, பிறதேசங்களைக் கைப்பற்றும் எண்ணம் கொண்டதாக, நீதிநெறி தவறாமல் வாழ்ந்ததாக, முல்லைக்குத் தேரும் புறாவுக்கு உடலும் கொடுத்த கொடையாக அறியப்படும்.

ஆனால் இலங்கை வேந்தன் இராவணனின் வரலாறு இவை எதற்குள்ளும் அடங்காதவை.

சீதை எனும் கற்புடைச் செல்வியைக் கடத்தி வந்து அசோகவனச் சிறையில் அடைத்து வைத்ததால், தன் சந்ததியையும் அழித்து தன் நாட்டையும் எரித்து தானும் அழிந்த வரலாற்றையே இராணவன் தனதாக்கிக் கொண்டான்.

இராவணன் அழிந்ததற்கு ஒரு பெண்ணைக் கடத்தி வந்து சிறையில் அடைத்து வைத்ததே காரணம் எனும்போது,

இதைவிட்ட கொடுமை வேறு என்னவாக இருக்க முடியும்.

இதை நாம் கூறும்போது வரலாறு சரி. இது இங்கு எதற்காக என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், இலங்கையில் சீதை சிறைப்படுத்தப்பட்ட பாவம் இன்னமும் தொடர்ந்து செல்கிறது என்பதைக் கூறுவதற்காகவே.

ஆம், இலங்கையில் ஆட்சித் தர்மம் என்பது அறவே இல்லை என்றாயிற்று.

இலங்கை மண்ணை தமிழ் அரசர்கள் ஆண்ட வரலாறுகள் இருக்கின்றபோதிலும் தமிழர்கள் இப்போது சிறுபான்மை என்பதற்காக அவர்களை நசுக்குவதே தமது இலக்கு என்பதுபோல சிங்கள ஆட்சியாளர்கள் நடந்து கொள்கின்றனர்.

பேரினவாதத் தீயைக் கக்கியதால் இந்த மண்ணில் நடந்த உயிரிழப்புகள் கொஞ்சமல்ல. இருந்தும் இன்னமும் திருந்தியபாடாக இல்லை.

ஆம், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரித்திருந்தனர்.

இவ்வாறு தமிழ் மக்கள் ஆதரித்த பிற்பாடு; ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இனி பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்தியே எங்களின் அரசியல் நகர்வு இருக்குமென்று ப்கிரங்கமாகக் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் நம்பி வாக்களித்து கைவிரலில் பூசிய மை காய்வதற்கு முன்னதாகவே, பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்தியதாக எங்களின் எதிர்கால அரசியல் இருக்கும் என்று ரணில் கூறினாரெனில், தமிழ் மக்களின் வாக்குகளை அவர் இம்மியும் கணக்கிலெடுக்கவில்லை என்பது புரிகிறது.

ஆக, பௌத்தத்தை முன்னுரிமைப்படுத்துவது என்று ரணில் விக்கிரமசிங்க கூற, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவோ; பெரும்பான்மை மக்களின் விருப்பத்தைப் பொறுத்தே அரசின் நடவடிக்கைகள் அமையும் என்பதாகக் கூறுகிறார்.

ஆக, பௌத்தம் பேரினவரதம் என்ற ஆயுதத்தை சிங்களத் தரப்பு இறக்கி வைப்பதாக இல்லை என்ற அளவில் இலங்கையின் எதிர்காலம் ஆரோக்கியமற்றதே என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

### கிளிநொச்சி அரச அதிபராக

## ரூபவதி, சுகுணவதியின் பெயர்கள் பரிந்துரை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் பதவிக்கு முல்லைத்தீவு அரச அதிபராக கடமையாற்றும் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க இந்து மத விவகார அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் சுகுணவதி தெய்வேந்திரம் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சுந்தரம் அருமைநாயகம் இராஜாங்க அமைச்சொன்றின் செயலாளராக இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து குறித்த இருவரின் பெயர்கள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நியமனத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (ம-3.10)

### வவுனியா பேருந்து நிலையத்தில்

## போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த மூவர் கைது

(வவுனியா)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா புதிய பேருந்து நிலையப் பகுதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்த பேருந்தில் இருந்து இறங்கி சென்ற இரு இளைஞர்களையும், அவர்களது பொதிகளையும் சோதனை செய்த போது பொக்கற்றுக்குள் கேரளா கஞ்சாவினை இரு இளைஞர்களும் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டதுடன், உடைமையில் இருந்த கஞ்சாவும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 19 மற்றும் 18 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று காலை வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் தனிமையில் நின்றிருந்தவரை சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது சட்ட விரோதமான போதைப் பொருளை தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட சட்டவிரோதமான போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,250)

## ஹெரோயினுடன் இளைஞன் அச்சுவேலியில் கைது

(யாழ்ப்பாணம்)

3 கிராம் நிறையுடைய உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினை உடைமையில்வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அச்சுவேலியில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று நண்பகல் நடத்திய சுற்றுக்காவல் நடவடிக்கையின் போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

22 வயதுடைய சந்தேக நபர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

அவர் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**இயற்கையின் குணங்களே செயல்களுக்கு காரணமாக இருக்கின்றன. அதன்படியே சகல கர்மங்களும் செய்யப்படுகின்றன. ஆணவத்தால் அறிவிழந்தவன் நானே இதை செய்கிறேன் என்று நினைக்கிறான். - பகவத்கீதை**

## மிருசுவில் விபத்து; இருவர் படுகாயம்

(கொடிகாமம்)

ஏ9 வீதியில் மிருசுவில் சந்திக்கு அருகாமையில் நேற்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்திராபுரம் பளையைச் சேர்ந்த வ.ஜெயக்குமார் (வயது-39) ஜெயக்குமார் ஹர்னியா (வயது-36) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து பளை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளை மிருசுவில் சேர்ச் வீதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆணும் பெண்ணும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-3,114)

## பணி இடமாற்றத்துக்கு எதிராக மேன்முறையீடு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க அதிபர்களுக்கான இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த நிலையில் தனது இடமாற்றத்தை சவாலுக்குட்படுத்தும் வகையில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரி.கனகேஸ்வரன் மேன்முறையீடு செய்துள்ளார்.

அரசாங்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட பணி இடமாற்றத்தின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேல திக அரசாங்க அதிபராக கடமையாற்றிய ம.பிரதீபன் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பணி இடமாற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில் யாழ். மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றுகின்ற ரி.கனகேஸ்வரன் முல்லைத்தீவுக்கு மேலதிக அரசாங்க அதிபராக பணி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக கனகேஸ்வரன் தனது பணி இடமாற்றம் தொடர்பில் மேன்முறையீட்டை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பியுள்ளதாக அறியக்கிடைத்தது. (ம-3.10)

## விநாயகர் விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜையுடன் பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கணபதி ஹோமமும் மறுநாள் செவ் வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு விநாயகர் ஷஷ்டி உற்சவமும் ஆரம்பமாகும். (ம-3)

## சத்திய தரிசனம்

### செய்யும் தொழிலே தெய்வம்



❖ எல்லா வேதங்களையும் கற்றுத் தேர்ந்தவராக இருந்தாலும், மனத்தூய்மை இல்லாவிட்டால் அதனால் பயன் இல்லை.

❖ ஆரோக்கியமும், மனவலிமையும் பெற்றவர்கள் ஏழை எளியவர்களுக்கு சேவை செய்ய முற்பட வேண்டும்.

❖ நீதிபோதனைகளை மற்றவர்க்கு எடுத்துச் சொல்வது எளிது. ஆனால், கடைப்பிடிப்பது கடினம்.

❖ தேடும் செல்வம் நம்மோடு வரப் போவதில்லை. அதனால், நம்முடைய பணம், பொருள், அதிகாரம், பெருமை அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணிப்போம்.

❖ செய்யும் தொழிலே தெய்வம். எந்தப் பணியும் உத்தமமானது தான். அதில் விருப்பத்தோடு ஈடுபடும்போது அதன் மதிப்பு கூடுகிறது.

❖ மனித வாழ்வை மரத்திற்கு ஒப்பிட்டால், நல்ல பண்பாட்டை வளர்க்கும் கல்வி அதன் வேராக அமைந்துள்ளது.

❖ அன்பு வழியில் கடவுளின் திருவடியில் பக்தி செலுத்துங்கள். குழப்பம் நீங்கி நிம்மதி பெறுவீர்கள்.

# சுமனின் ஹெற்றிக்கோல் கைகொடுக்க சம்பியனானது மெசியா அணி



கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்தி வேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் வலைப்பாடு மெசியா அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 06:01 என்ற கோல் கணக்கில் மெசியா அணி வெற்றி பெற்று சம்பியனானது.

மெசியா அணி சார்பாக சுமன் 03, கொலின்ஸ், அஜந்தன், பிரகாஸ் ஆகியோர் தலா ஒரு கோலையும் செந்தமிழ் அணி சார்பாக யூட் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக சுமன், தொடராட்ட நாயகனாக யூட், சிறந்த பின்கள வீரராக ஜொய்சன், சிறந்த கோல் காப்பாளராக ஜெபரஜின், வளர்ந்து வரும் வீரராக அருண் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# மருதநிலா வெற்றிக்கிண்ணம் ஈகிள்ஸ் அணி வசம்



2019 ஆம் ஆண்டிற்கான மருதநிலா வெற்றி சமர் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் அண்மையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து கோல்டன் பிறதர்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:03 என்ற கோல் கணக்கில் ஈகிள்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியனானது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக டிலக்சனும், சிறந்த கோல் காப்பாளராக சதீஸ்ும் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பின்கள வீரராக யது தெரிவு செய்யப்பட்டார். (க)

# மூன்றாம் இடத்தை தனதாக்கியது உடுப்பிட்டு நவஜீவன்ஸ் அணி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தி வருக்கின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:01 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக டினோஜன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது வதிரி டயமன்ஸ் அணி




அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தி வருக்கின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியனானது. டயமன்ஸ் அணி சார்பாக பிறேம்குமார், சுஜிதரன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர். (க)

# பான் ஏசியா கிண்ண உதைபந்தாட்டம் கிளிநொச்சி உருத்திரபுரம் அணி வசம்

பான் ஏசியா கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:00 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

உருத்திரபுரம் அணி சார்பாக தனுசன் 02, தேனுஜன் ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தனர்.

இறுதிப்போட்டி ஆட்ட நாயகனாக தனுசனும், தொடராட்ட நாயகனாக தேனுஜனும், சிறந்த கோல் காப்பாளராக ஜனனனும், சிறந்த பின்கள வீரராக கிஷாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)



## ஹயஸ் - மோட்...

பிற்பகல் 3 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அச்சுவேலியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான எம்.திலீபன் (வயது - 40) என்ற குடும்பத் தலைவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

"யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த வானும் எதிரே பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி இவ்விபத்து இடம்பெற்றது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் யாழ்.மாவட்ட பங்குச் சந்தை முகாமையாளராக கடமையாற்றி வந்தவர் என்பதுடன் கடந்த வாரம் யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுவியாரபார மாணிப் பட்டத்தை பெற்றிருந்தமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,60)

## முள்ளிவாய்க்...

சுகாதார நிலைய வளாகத்தில் இருந்து தமிழன் கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் மரம் ஒன்று நடுவதற்காக ஊழியர் ஒருவர் கிடங்கு ஒன்று தோண்டிய சந்தர்ப்பத்தில் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்ட தமிழன் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் குறித்த ஊழியர் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து அவ்விடத்திற்கு சென்ற பொலிஸரும் அதிரப்படையினரும் குறித்த கைக்குண்டை மீட்டுள்ளனர். (ம-3.281)

## குடும்பஸ்தர்...

சேர்ந்த சண்முகநாதன் இராசகிருஸ்ணன் (வயது - 41) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நிமோனியா காய்ச்சல் காரணமாக குறித்த நபர் உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கிணற்றில் தவறி...

வளவினுள் விளையாடிக் கொண்டிருந்த குறித்த சிறுவன் தவறுதலாக கிணற்றில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## அரசியலமைப்பு...

அரசியலமைப்பு சபை இன்று முதன் முறையாக கூடுகிறது.

அரசியலமைப்பு சபையின் தலைவரான சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை, பாராளுமன்றம் கூடி இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்காதமை காரணமாக, இன்று இடம்பெறவுள்ள அரசியலமைப்பு சபையின் கூட்டத்தில் அவர் பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அரசியலமைப்பு சபையில் அங்கம் வகித்த அனைவரும் இன்று இடம்பெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## பாதுகாப்புச் செய..

யாடலுக்கு வடக்கு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முப்படைகளின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவானதையடுத்து பாதுகாப்புச் செயலராக, முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்டார்.

பாதுகாப்புச் செயலராக பதவியேற்ற பின்னர் முதன்முறையாக அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். (ம-3)

## யாழ்.பல்கலைக்...

விலகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,10)

## இந்திய மத்திய...

இந்திய மாநிலங்களவையில் குடியுரிமைத் திருத்தச் சட்ட முன்வரைவின் மீதான விவாதத்தில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ நேற்று உரையாற்றினார்.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் இருக்கின்ற, இலங்கையில் இருந்து வந்த தமிழர்கள், மியன்மார் நாட்டில் இருந்து வந்த ரொகிங்யா முஸ்லிம்கள் ஆகிய அகதிகளின் நிலை குறித்து இந்தச் சட்டத்தில் எந்த அறிவிப்பும் இல்லை.

மேலும், அண்டை நாடுகளில் அடக்குமுறைக்கு உள்ளாகி இருக்கின்ற ஷியா மற்றும் அகமதியா முஸ்லிம்கள், இந்தியாவில் குடியுரிமை கோருவதை இந்தத் திருத்தம் தடை செய்கின்றது.

ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகி, எங்கள் பெண்கள், எங்கள் சகோதரிகள், எங்கள் மக்கள் படுபயங்கரமாக, குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர். ஏதிலிகளாக வந்த அவர்களைப் பற்றி இந்த அரசுக்கு எந்த அக்கறையும் இல்லை.

அவர்கள் குடியுரிமையைப் பற்றி யோசிக்கக்கூட இவர்களுக்கு மனம் இல்லை. இரத்தம் தோய்ந்த கரங்களோடு வந்த இலங்கை ஜனாதிபதியோடு கைகுலுக்கி, கொஞ்சிக் குலாவத்தான் உங்களுக்கு நேரம் இருந்தது. ஈழத்தமிழர்களைப் பற்றி உங்களுக்குக் கவலை இல்லை. இந்தச் சட்டத்தை, வங்கக் கடலில் தூக்கி எறியுங்கள்" இவ்வாறு வைகோ பேசினார். (ம-3)

# பாராளுமன்றத் தேர்தலில் சஜித்தே பிரதமர் வேட்பாளர்

## வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவராக சஜித் பிரேமதாஸ பாராளுமன்றில் செயற்படுவாராயின் அவரே எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராகுவார் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் இணக்கம் எட்டப்படுமாயின் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயவர்த்தன, ஐக்கிய தேசியக் கட்சியில் நிச்சயமாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் புதிய திட்டங்களுடனான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும்.

இதன்போது, கட்சியின் தலைமைத்துவ மாற்றம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-3)

## சுவிஸ் தூதரக...

27ம் திகதி சுவிஸ் தூதர், இலங்கை அரசிடம் முறையிட்டிருந்தார்.

கடந்த 8,9,10ம் திகதிகளில் சுவிஸ் பணியாளரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருந்தது.

இதேவேளை, கடத்தப்பட்ட சுவிஸ் பணியாளரின் கணவனின் தந்தையான பெவன் பெரேரா கடந்த 2010ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் ஐ.தே.க சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட தகவலை பொலிஸார் வெளியிட்டுள்ளனர். (ம-3)

## இலங்கைத் தமி...

தமிழர்களும், முஸ்லிம்களும் புறக்கணிக்கப்பட்டனர் என்று மக்கள் நீதி மையத்தின் ஸ்தாபகர் கமல்ஹாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த யோசனை சிறந்த யோசனையாக இருக்குமாயின் இந்த இரண்டு மக்கள் பிரிவினரும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் திட்டமிட்டு இனப்படுகொலைசெய்யப்பட்டனர். முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

எனவே, ஏன் இவர்களை இந்த யோசனை உள்ளடக்கவில்லை என்று அவர் வினவியுள்ளார். (ம-3)

## ரொஷிமிட்சு...

தொடக்கம் 17ஆம் திகதி வரை, இலங்கை மற்றும் ஸ்பெய்ன் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளாரென ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலில் இலங்கைக்கு வரும் அவர் அடுத்து ஸ்பெய்னுக்கு செல்லவுள்ளார். இலங்கைக்கு வரும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ரொஷிமிட்சு மொடேகி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இலங்கைக்கு பொருளாதார அபிவிருத்தி மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான பங்களிப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஜப்பான் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 11-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2327
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 05 27 77 79
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11.12.2019
சீட்டிழுப்பு இலக்கம் 0999
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 7 5 4 0 0 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/12/11
சீட்டிழுப்பு இலக்கம் 0470
U 03 வெற்றி இலக்கங்கள் 32 44 47 63

தன நிதானய
2019/12/11
0237
G 25 36 48 63
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

சம்வர்தன வாசனாவ உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 304
சீட்டிழுப்பு திகதி 11.12.2019 நீலம்
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 06 07 53 விதி எண் 01
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 48,188,068
2019.12.13 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 818
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 72,462,275/-
வெற்றி இலக்கங்கள் 14 42 67 70 ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3273 திகதி: 2019.12.11
ஊதா புதன்கிழமை
சுப்பர் தனலட்சுமி 8097
வெற்றி இலக்கங்கள் 03 09 14 72 ஆங்கில எழுத்து J
அடுத்த ஜக்பொட் 31,933,280/-
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11/12/2019 வெற்றி வாரம் 2704 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் துலாம் 27 29 58 62
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,803,730
2019/12/12 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

# மரண அறிவித்தல்கள்



## தம்பையா சிவபரஞ்சோதி

மண்டைதீவு - 06


(ஓய்வு பெற்ற ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சமாதான நீதவான்)

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.81, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கினை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சிவபரஞ்சோதி அவர்கள் 10.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரசம்மா (விமலா - ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், பலராம் (ஆதவன்-லண்டன்), நிசாந்தி (லண்டன்), உமைசொரூபி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகராஜா, அற்சுதன் ஆகியோரின் மாமனாரும், ஆதிவ்வின் அன்புப் பேரனும், அகிலத்திருநாயகி, அரங்கநாயகி ஆகியோரின் பாசமிகு தம்பியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் குணரட்ணசிங்கம், சோதிவேற்பிள்ளை, காலஞ்சென்ற நல்லநாயகம் மற்றும் கமலாதேவி, குணநாயகம், நிர்மலாதேவி, இராமநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாரதாம்பிகை, புஸ்பராணி, ரவீந்திரநாத், செல்வராணி, சண்முகராஜா, பரமநாயகி ஆகியோரின் அன்பு சகலனும், யதிந்திராவின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2019) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் இல.81, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.81, மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(C-8506)
தகவல் :சி.பலராம் (ஆதவன்- மகன்)
075 267 3301 / 076 284 8457



## வல்லிபுரம் ஜெகநாதன் (ராசு)

(மகாவிஸ்ணு கட்டடப்பொருள் உரிமையாளர்)

யாழ்.நாவலர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஜெகநாதன் அவர்கள் கடந்த (08.12.2019) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னலஷ்சுமி தம்பதியினரின் பாசமிகு மகனும், முள்ளியவளையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - திலகவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தகுமாரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவரான அரியமலர், லோகநாதன், தவமணி, சிறிகாந்தன், இராசரட்ணம், சண்முகநாதன், இராசயோகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவரான வீரசிங்கம், இராசலஷ்சுமி, பொன்னுத்துரை, மகேந்தினி, பேபிசைலா, ஜெயா, நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிறஞ்சனா, நிறஞ்சன், நிஷாந்தனா (கனடா), சுஜிவன், அஜந்தன், பார்த்திபா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரன், சசிரேகா, ரவிந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதிநிலா, பானுசாந், தனுசிகன், சயந்தன், பிரியந்தி, சந்தியா, பானுகா (கனடா), தனுஸ்காந், தரணிதரன், துபிசன், கிரிதரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சிந்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் வீதி,
நல்லூர்.
(C-8506)
தகவல் : குடும்பத்தினர்
077 905 0185 / 077 847 0341

Chemistry & Maths
Personal & Group Classes
தொடர்புகளுக்கு :
076 322 0916
[1448]

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்)
(C-8508)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி
V2 TRAVELS
(C-8115)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(1414)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-8377)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 13.11.2019 புதன்கிழமையன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சின்னையா நடராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 13.12.2019 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், 14.12.2019 சனிக்கிழமை சபிண்டீகரணக் கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லிபுரக்கோவிலடி,
வல்லிபுரம், புலோலி.
(C-8507)
– குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.